

# 1. எல்லாம் சுதேசி

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு" என்றார் அமரகவி பாரதியார். இது பழமையும் பெருமையும் வாய்ந்த நாடு. ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் இந்த நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்டனர். அவர்கள் இந்தியாவைச் சுரண்டித் தங்கள் நாட்டை வளப்படுத்துவதில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர் ஆட்சியில் மக்களின் துயரம் நாளுக்கு நாள் பெருகியது. இந்திய மக்கள் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பின் தங்கிவிட்டார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தாய்நாட்டின் அடிமைத்தளையை உடைத்தெறியப் பலர் விறிட்டெழுந்தனர். இந்தியாவின் இழிநிலை கண்டு இந்தியத் தலைவர்கள் பலர் கொதித்து எழுந்தனர்.

'இந்தியா சுதந்திரம் பெறவேண்டும்; அந்நிய ஆட்சி அழிந்து இந்தியர்களே இந்நாட்டை ஆளவேண்டும்; சகல துறைகளிலும் முன்னேற வேண்டும்; வாழ்க்கைத்தரம் உயர வேண்டும்' என்று இந்தியத் தலைவர்கள் விரும்பினர். இந்த எண்ணம் ஈடேறுவதற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் நாட்டுக்கே அர்ப்பணித்தனர். தேசத் தொண்டினை யும், மக்கள் சேவையையுமே அவர்கள் பெரிதெனக் கருதினர். பிறர் துன்பம் கண்டு அவருடைய துன்பத்தினைப் போக்குதலே தம் முதற்கடமை எனக் கொண்டனர் பலர். இத்தகைய நல்லெண்ணம் கொண்ட மாபெரும் தலைவர்கள் செய்த தியாகத்தால் இந்தியா 1947-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாள் சுதந்திரம் பெற்றது. அந்நியரின் ஆட்சியை அகற்றப் பலர் அரும்பாடு பட்டனர். உள்ளத்தால் பொய்யாது ஒழுகி உலகத்தார்

உள்ளத்துள் எல்லாம் இடம் பெற்றனர். இவ்வாறு இந்திய நாடு விடுதலை பெற, தந்நலம் துறந்து நாட்டிற்குத் தம்மை அர்ப்பணித்த வீரர்களுள் ஒருவர் வ. உ. சிதம்பரனார் அவர்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆணிவேரான வெள்ளை வணிகருடைய 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு' எதிர்ப்பாக 'சுதேசிக் கப்பல் கம்பெனி' ஒன்றினைத் தோற்றுவித்து, 'கப்பலோட்டிய தமிழன்' என்று சிறப்புப் பெயர் பெற்ற வ. உ. சிதம்பரனாரின் சரிதையை இங்கு பார்ப்போம்.

## 2. ஒரு பிள்ளைக்காக ஒரு பள்ளி

பாண்டிநாடு தமிழகத்தின் ஒரு பகுதி. பண்டை நாளில் அறநெறி தவறாத அரசர்களும், போரில் புறம் காட்டி ஓடாத வீரர்களும், வாய்மை தவறாத வணிகர்களும், பொய்படிமையில்லாத புலவர்களும் நிறைந்திருந்தனர். நீதி நெறி தவறிய குற்றத்திற்காகத் தன் உயிரினை அளித்த நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்த நாடு இது. உத்தமப் புலவர்கள் ஒருங்கே அமர்ந்து தமிழ் வளர்த்த சங்கம் திகழ்ந்ததும் இங்கேதான். இப் பாண்டிய நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் தான் வெள்ளையருக்கு வரி செலுத்த மறுத்து வீரப்போர் புரிந்த வீரபாண்டியக் கட்டபொம்மன் தோன்றினான். ஒட்டப்பிடாரத்திற்கு வடக்கே சுமார் எட்டு மைலுக்கப்பாலுள்ள எட்டையபுரத்தில்தான் கவியரசர் பாரதியார் தோன்றினார். இவ்வளவு பெருமை பொருந்திய ஒட்டப்பிடாரத்தில், உலகநாத பிள்ளைக்கும், பரமாயி அம்மையாருக்கும் குமாரராகத் திருவாளர் வ. உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி வியாழக் கிழமை தோன்றினார். அவருக்குப் பின் நான்கு சகோதரர்களும், இருசகோதரிகளும் உண்டு.

வ. உ. சிதம்பரம் முதலில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் வீரப்பெருமாள் அண்ணாவி என்பவரிடம் படித்தார். இளமையிலேயே இவர் உள்ளத்தில் தமிழ்வித்து ஆழ்ந்து பதிந்து வளரலாயிற்று. தமிழ்மொழியைப் பயில்வித்த பின்னர் அவருடைய தந்தை ஆங்கில மொழியையும் கற்பிக்க விரும்பினர். அப்போது ஒட்டப்பிடாரத்தில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான பள்ளி இல்லை. செல்வச் சிறப்புடைய உலகநாதபிள்ளை தமது செலவிலேயே ஒட்டப்பிடாரத்தில் புதிய பள்ளி ஒன்றைக் கட்டுவித்தார். அப்பள்ளிக்கு ஆசிரியராக நாதப்பிள்ளை என்பவரை நியமித்தார். அவர் ஒருவருக்காகக் கட்டப்பட்ட அப்பள்ளி பலரும் ஆங்கிலங்

கற்கப் பயன்படுவதாயிற்று. அங்குச் சில காலம் படித்த பின்னர் தூத்துக்குடி சென்று அங்குள்ள செயின்ட் பிரான்சிஸ் சேவியர் உயர்நிலைப்பள்ளியில் தொடர்ந்து படித்தார் சிதம்பரம். உயர் நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்ததும், கால்டுவெல் கல்லூரியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேர்விலும் வெற்றியடைந்தார். சிதம்பரம் நாட்டுக்கல்வியில் நாட்டமுடையவராதலால் இவருக்கு ஆங்கிலத் தினும் தமிழறிவே சிறந்து விளங்குவதாயிற்று.

சிறுவயதில் குழந்தைகள் எத்தனை விளையாட்டுகள் விளையாடுவரோ அத்தனை விளையாட்டுகளையும் சிதம்பரம் அறிந் திருந்தார். தமிழருக்கே உரிய பல வீர விளையாட்டுகளை சிதம்பரம் விரும்பிக் கற்றார். சிதம்பரம் பள்ளியில் படிக்கும் போது கட்டுக் கடங்காத காளையாய்த் திரிந்து வந்தார். மிக நிறையக் குறும்பு கள் செய்தபோதிலும் அவரிடம் இருந்த அன்பு காரணமாக அவருடைய தந்தை அவரது பிழைகள் அனைத்தையும் சகித்துக் கொள்வார். அளவுக்கு மீறினால் பொறுமை இழந்து நன்றாக அடித்து விடுவார். அச்சமயங்களில் சிதம்பரம் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடிவிடுவார்.

ஒரு சமயம் ஏதோ தவறு செய்ததற்காகச் சிதம்பரத்தை அவருடைய தந்தையார் கடுமையாக அடித்துவிட்டார். பல தடவைகள் அடிபட்டவர் என்றபோதிலும், அம்முறை அவர் தந்தை அடித்த அடிகள் பொறுக்க முடியாமல் மனம் துன்புற்றார். துறவு கொள்ள முடிவு செய்தார். பட்டினத்தார் போல மொட்டை அடித்துக்கொண்டு, பருத்தியாடைக் கோவணத்துடன் கிளம்பி விட்டார். அவ்வாறே பல நாட்கள் உணவின்றி உறக்கமின்றி ஊர் ஊராகச் சுற்றினார். கடைசியில் மதுரை வந்து சேர்ந்தார். பட்ட துன்பங்களை எண்ணி வீடு திரும்ப நினைத்தார். ஒட்டப் பிடாரத்திலுள்ள ஒரு நண்பருக்குக் கடிதம் எழுதினார். அது பற்றி அறிந்த அவர் தந்தையார் மதுரைக்கு ஓடோடியும் வந்தார். அவரை மார்புறத் தழுவிக்கொண்டு அழுதார். பிறகு சிதம்பரத் திற்குப் பல புத்திமதிகள் கூறி அழைத்துச் சென்றார்.



## 3. வக்கீல் பரம்பரை

சிதம்பரத்தின் தந்தை அவருடைய குறும்புத்தனங்களைக் குறைக்க எண்ணி அவரை ஒட்டப்பிடாரம் தாலுக்கா அலுவலகத்தில் குமாஸ்தாவாக்கினார். தந்தையின் கட்டளைக்கிணங்கி சிதம்பரம் வேலையில் அமர்ந்தார். ஒன்றிரண்டு மாதங்களுக்கு மேல் அந்த வேலையில் அவரால் இருக்க முடியவில்லை. வக்கீல் பரீட்சைக்குப் படிக்க எண்ணினார். தமது விருப்பத்தைத் தந்தையாரிடம் கூறினார். சிதம்பரத்தின் கருத்தறிந்த அவருடைய தந்தை அவரைத் திருச்சிக்கு அனுப்பினார். அங்கு கணபதி ஐயர், ஹரிஹர ஐயர் என்ற இரு சட்ட நிபுணர்களிடம் படித்தார். பின்னர் 1895-ஆம் ஆண்டில் சிதம்பரம் சட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று வழக்கறிஞர் ஆனார். முதன் முதலில் தமது தொழிலைச் சிதம்பரம் ஒட்டப்பிடாரத்திலேயே துவக்கினார். அங்கேயே ஒரு சப்-மாஜிஸ்திரேட் கோர்ட் இருந்தது. சிதம்பரனாரின் பாட்டனார், பெரிய தந்தையார், தந்தையார் எல்லோருமே வழிவழி வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருந்த காரணத்தால் சிதம்பரனாரின் இல்லத்திற்கு 'வக்கீல் ஐயா வீடு' என்ற சிறப்புப் பெயர் ஏற்படுவதாயிற்று.

சிதம்பரனார் சிவில், கிரிமினல் என்னும் இரு துறைகளிலும் ஈடுபட்டிருந்தபோதும் கிரிமினல் துறையில்தான் அவருக்குத் திறமை அதிகம். பிற வழக்கறிஞர்கள் இவரைக் கண்டு பொறாமை கொள்ளும் வண்ணம் சிறப்பாகத் தொழிலை நடத்தினார். மற்றவர்களை விட இவர் அதிக வருமானம் அடைந்து வந்தார். ஒழுக்கம், வாய்மை, பிறர்நலம் பேணல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். எடுத்துக்கொண்ட வழக்குகள் பலவற்றில் சிதம்பரனார் வெற்றிபெற்றார். வெற்றி பெறுவது கடினம் எனத் தெரிந்தால் இவரே சமரசம் செய்துவைப்பார்.

கட்சிக்காரர்களை ஒருபோதும் கைவிடமாட்டார். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இன்றி எல்லோரையும் ஒரே விதமாய் மதிக்கும் இயல்புடையவர். இவரது நேர்மையையும், கடமை உணர்ச்சியை யும் கண்டு பலரும் இவரைப் பெரிதும் மதித்தனர்.

போலீசார் யார் மீதாவது தவறான வழக்குத் தொடுத்திருப்ப தாய்த் தெரிந்தால் அந்த நிரபராதிக்கு உதவி புரிவார். தம்முடைய இக்குணத்தால் போலீஸ் அதிகாரிகள் கோபத்திற்கு ஆளாகவேண்டியிருக்குமே என்று அஞ்சமாட்டார்.

அவரது போக்கில் வெறுப்புக் கொண்ட போலீஸ் அதிகாரி கள், ஹெட்கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் என்பவரைக் கொலை புரிந்ததாக வந்த வழக்கில் அவரை ஒரு குற்றவாளி ஆக்கினர். குற்றவாளிகளுக்காகச் சிதம்பரம் வாதாடக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்தனர். எதிரிகளுக்காக வழக்காடுவதில்லை என்று வாக்குறுதி கொடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டார். பின்னர் விசாரணையின்போது எதிரிகளுக்காக வாதாடி, வழக்கில் வெற்றியும் பெற்றார். ஆத்திரம் கொண்ட அதிகாரிகள் அவர் மீது வழக்கு தொடர்ந்தனர். அவ்வழக்கை விசாரித்த மாஜிஸ்தி ரேட் பொய் வழக்கு என அதனைத் தள்ளுபடி செய்தார். சிதம்பரனாருக்கு நஷ்டஈடு தரும்படியும் உத்தரவிட்டார். தொல்லை கொடுத்த போலீஸ் கான்ஸ்டபிளும் வேலையிழந்தான். நீதி இலாகாவிலும் லஞ்சம் வாங்கும் பழக்கம் உள்ளதைக் கண்டு சினம் கொண்டார். ஏகாம்பரம் என்ற சப்-மாஜிஸ்திரேட் லஞ்சம் வாங்கியது கண்டார். அவர் மீது வழக்குத் தொடுத்து அவருக் குத் தண்டனை கிடைக்கச் செய்தார். பிறகு மற்ற இரு அதிகாரி கள் மீது வந்த லஞ்ச வழக்கில் அவர்களுக்கு எதிராக வாதாடி குற்றச்சாட்டை நிரூபித்தார். அந்த இரு அதிகாரிகளுக்கும் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. அதிகாரிகளைப் பகைத்துக் கொள்வது சிதம்பரனாரின் தந்தைக்குப் பிடிக்கவில்லை. தந்தை யின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தூத்துக்குடிக்கு 1900-ஆம் ஆண்டு சிதம்பரனார் சென்றார்.

# 4. எல்லோரும் ஒரு குலம்

சிதம்பரனுருக்கு 23 வயது ஆகும்போது அவருடைய தந்தை திருச்செந்தூர் சுப்பிரமணிய பிள்ளையவர்களின் குமாரத்தி வள்ளியம்மை என்பவரை மணம் செய்து வைத்தார். இவ்வம்மையார் துன்பம் வந்த காலத்து ஊன்றுகோல் போலவும், அறுசுவை யுண்டி அளிப்பதில் அன்னை போலவும் விளங்கினர்.

சிதம்பரனர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த ராமையதேசிகர் என்பவரைத் தம் இல்லத்தில் வைத்துக் காப்பாற்றி வந்தார். அவர் கண்கள் இரண்டும் இழந்த அந்தகர்; ஆயினும் அகக் கண்களை இழக்காமல் ஆத்மஞானியாக இருந்தார். வள்ளி அம்மையார், அவருக்கு அமுதூட்டுவார். இழிகுலத்தோனை வீட்டில் வைத்து உணவளித்து வருகிருரென உற்ருரும் உறவினரும் பழிச்சொல் கூறுவாராயினர். சிதம்பரனர் இதுபற்றி தமது மனைவியாரிடம் கூறினர். அதற்கு வள்ளியம்மையார் "துறவிக்குக் குலம் ஏது? உயிர்கள் தோறும் இறைவன் வீற்றிருக்கிருன் என்று கூறியது நீங்கள்தாமே! பழிப்பார் பழிக்கட்டும்; நாம் நம் மனவழி நடப்போம்" என்ருர்.

வள்ளியம்மையார் தமிழ்க் கல்வியில் சிறந்து விளங்கினர். அவ்வம்மையார் திருக்குறளைப் பொருளுடன் ஓதி உணர்ந்திருந்தார் என்று சிதம்பரனரே கூறுகின்ருர். இவ்வித நற்குணங்களைப் பெற்றிருந்த வள்ளியம்மையார் 1901-ஆம் ஆண்டில் அகால மரணமெய்தினர். அவ்வம்மையாரின் பிரிவால் பிள்ளையவர்கள் பெருங்கவலையடைந்தார். நன்றியறிதலுடைய சிதம்பரனர் மீண்டும் அவ்வம்மையாரின் குடும்பத்திலேயே திருமதி மீனட்சியம்மை என்பவரைத் திருமணம் புரிந்துகொண்டார்.

மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பதை அவர் அடியோடு வெறுத்தார். 'இறைவன் படைப்பிலே அனைவரும்

சமம்' என்ற உயரிய கருத்தை இவர் கொண்டிருந்தார். சிதம்பரனார் சில காலம் சென்னையில் வசிக்க நேர்ந்தது. அப்போது ஒரு நாள் ரிப்பன் அச்சு இயந்திரச் சாலையில் சாமி சகஜானந்தரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார். அப்போது பிள்ளையவர்கள் சகஜானந்தரின் சாதியை விசாரித்தாராம். ''நான் நந்தனார் வகுப்புப்பிள்ளை'' என்று அவர் பதில் கூற, சிதம்பரனார் சகஜானந்தரின் இருகைகளையும் பிடித்துக்கொண்டு ''நீர் உண்மையைக் கூறியதால் நீரே உண்மையான அந்தணர்'' எனக் கூறினார். சகஜானந்தரைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கேயே அவருக்கு உணவளித்தார். தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சிறந்த நூல்களைக் கற்பித்தார். சிதம்பரனாரிடம் தமிழ்க் கல்வி பெற்றவர்கள் பலர். முதல்நாள் சொல்லிக் கொடுத்தவற்றை மறுநாள் ஒப்புவிக்கவேண்டும். இல்லாவிட்டால் வேறுபாடம் நடத்த மாட்டார். இதனாலேயே இவரிடம் திருக்குறள் படிக்க விரும்பிய ராஜாஜி அவர்கள், ''எனக்குப் பாடம் சொல்லித்தரும் பொறுமை தங்களுக்கில்லை. தங்களிடம் பாடம் கேட்கும் பொறுமை எனக்குமில்லை'' என்று கூறினாராம்.

சிதம்பரனார் சென்னையிலிருந்து ஒட்டப்பிடாரம் சென்றார். உடன் சகஜானந்தரையும் அழைத்துச் சென்றார். எல்லா விழாக்களுக்கும் சகஜானந்தரை அழைத்துச் செல்வார். யாராவது சகஜானந்தரின் குலத்தைப் பற்றிக் கேட்டால், ''துறவிகளிடம் சாதி பற்றி விசாரிக்கக் கூடாது'' என்பார். ''தமது பிள்ளை போன்று என்னை வளர்த்தார் அப்பெருந்தகை வள்ளல்'' என்று சிதம்பரனாரின் அன்பு பற்றி சகஜானந்தரே கூறுகிறார்.

## 5. சுதேசிக் கப்பல் கம்பெனி

திரை கடலோடியும் திரவியம் தேடுவதில் திறமை பெற்றிருந்தனர் பண்டைத்தமிழர். கப்பலோட்டும் கலை தமிழருக்கே உரித்தாயிருந்தது. சோழ மன்னர்கள் பலம் வாய்ந்த கப்பற் படையை உடையவராயிருந்தனர். பிறகு தமிழகம் உள்பட இந்தியா ஆங்கிலேயர் வசம் ஆயிற்று. நம்மிடமிருந்த அரசைப் பறித்ததோடு நில்லாமல் வாணிபத்தையும் பிடுங்கிக்கொண்டனர். நில ஆதிக்கத்துடன் கடல் ஆதிக்கமும் பெற்றனர், அதன் மூலம் நம் செல்வத்தையும் சுரண்டுவாராயினர்.

தமிழரது உரிமையைப் பறித்து செல்வத்தைச் சுரண்டுவது கண்டு சிதம்பரனாரின் நெஞ்சு பொறுக்கவில்லை வெள்ளையரை விரட்டியடிக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். இந்த நிலையில் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார் லார்டு கர்சான். கர்சான் வங்காள மக்களிடையே வேற்றுமையை உண்டாக்க நினைத்தார். அதனாலேயே இந்து வங்காளம், முஸ்லிம் வங்காளம் எனப் பிரித்தார். ஆனால் வங்காளிகள் கர்சானின் எண்ணத்தைப் புரிந்துகொண்டனர். பிரிவினையை எதிர்த்துப் போராடினர். இந்தப் போராட்டம் இந்தியா முழுவதும் பரவியது. வங்கப் பிரிவினையை எதிர்த்து அந்நிய ஆடை பகிஷ்காரம் செய்தனர். அந்நிய ஆடைகள் மலை மலையாக குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. அந்நிய ஆடையில் பற்றி எரிந்த தீயானது இந்திய மக்களின் மனத்தே கொழுந்து விட்டெரிந்த சினத்தீயைக் காட்டிற்று.

சரியான சமயம் இதுவென சிதம்பரனார் உணர்ந்தார். அவர் தமது வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டு நாட்டு விடுதலைப் போரில் குதித்தார். தம்மிடமிருந்த அந்நிய ஆடைகள் அனைத்தையும் கொளுத்திவிட்டார். அந்நியப் பொருள்கள் வாங்குவதில்லை என உறுதி பூண்டார். அந்நியத் துணி அணிந்திருப்பவரைக்

கண்டாலும் அவருக்குக் கண் சிவந்துவிடும். அந்நியரை எதிர்த்து வங்கத்தில் போர் துவங்கிவிட்டது கண்டு மகிழ்ந்தார். தமிழ் மக்களைத் தாயகத்தின் விடுதலைப் போரில் குதிக்கச் செய்வது தன் கடமை என நினைத்தார்.

ஆங்கிலேயர்கள் இந்தியச் செல்வத்தைச் சுரண்டுவது பற்றி சிதம்பரனார் நன்கு அறிந்திருந்தார். தமது முதல் தாக்குதலை வணிகக் கூட்டத்தின் மீது ஆரம்பித்தார். தூத்துக்குடிக்கும், சிங்களத்திற்கும் இடையில் பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் கப்பல்களே வாணிபம் செய்து வந்தன. அக்கம்பெனி ஒரு வெள்ளைக்கார வணிகருடையது. இந்தியாவில் எழுந்த தேசீய இயக்கத்தை இக் கம்பெனி வெறுத்தது. பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் கொட்டத்தை அடக்க எண்ணினார். தூத்துக்குடியில் உள்ள வணிகர்களின் உதவியால் 1906-ஆம் ஆண்டு சுதேசிக் கப்பல் கம்பெனியை தோற்றுவிக்க எண்ணினார் சிதம்பரனார். ஆரம்பத்தில் சிதம்பரனாரின் காரியம் வெற்றி பெற சில வணிகர்கள் உதவிபுரிந்தனர். சிலர் பின்னர் உதவுவதாகக் கூறினார். ஆனால் சிலர் அவரது முயற்சியைக் கேலி செய்தனர். ஆனால் சிதம்பரம்பிள்ளை முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்ற முடிவுடன் பாடுபட்டார்.

1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினாறும் தேதி அக்கம்பெனி பதிவு செய்யப்பட்டது. பங்கு ஒன்றின் விலை ரூபாய் இருபத்தைந்து. நாற்பதாயிரம் பங்குகள் விற்று, பத்து லட்சம் ரூபாய் சேர்ப்பதென முடிவு செய்தனர். அக்கம்பெனியின் செயலாளர் பொறுப்பைச் சிதம்பரம் பிள்ளை ஏற்றார். மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவரான திரு. பாண்டித்துரைசாமித் தேவர் கம்பெனியின் தலைவரானார். பின்னர் பங்குதார்கள் சேர்க்கும் வேலை ஆரம்பமாயிற்று. ஜனாப்ஹாஜி முகம்மதுபக்கீர்சேட் என்பவர் மட்டும் இரண்டு லட்சம் ரூபாய்க்குப் பங்குகள் வாங்கினார். சுதேசிக் கப்பல் கம்பெனியாரின் குறிக்கோள் தமிழர் அல்லது இந்தியர் நலன்களுக்காக மட்டும் பாடுபடுவதல்ல ஆசியக் கண்டத்தல் உள்ளோர் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேறுவதே யாம்.

ஆரம்பத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியார் சொந்தத்தில் கப்பல்கள் வாங்கவில்லை. குத்தகைக்கு 'ஷாலைன் ஸ்டீமர்ஸ்



கம்பெனி'யிடமிருந்து கப்பல்களை வாங்கி ஓட்டினர். தமக்குப் போட்டியாகக் கப்பல்கள் ஓடுவதை பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியார் விரும்பவில்லை. சுதேசிக் கப்பல் கம்பெனியைக் கலைக்க அவர்கள் முயன்றனர். 'ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனி'யின் சொந்தக்காரர் எஸ்ஸாஜிடாஜ்பாய் என்பவர். பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியாரின் மிரட்டலுக்குப் பயந்து சுதேசிக் கப்பல் கம்பெனியிடமிருந்த தம் கப்பல்களை திருப்பிக்கொண்டார். சுதேசிக் கப்பல் கம்பெனியினர் கப்பல் இன்றித் தவித்தனர். சுதேசிக் கம்பெனியை நம்பி வெள்ளையரைப் பகைத்துக்கொண்ட தமிழ் வணிகர்கள் திகைத்தனர். சிதம்பரனர் இவ்வளவு துன்பத்திலும் மனம் கலங்கவில்லை. உடன் கொழும்பு சென்று பெரிய கப்பல் ஒன்றைக் குத்தகைக்குப் பேசி, தூத்துக்குடித் துறைமுகத்திற்குக் கொண்டுவந்தார். இது கண்டு தமிழ் வணிகர்கள் மகிழ்ந்தனர்.

சொந்தக் கப்பல்கள் இருந்தாலொழிய சுதேசிக் கம்பெனி ஆங்கிலேயரை எதிர்க்க முடியாது என்று உணர்ந்தார். புதிய கப்பல் வாங்கப் பணம் திரட்ட ஆரம்பித்தார். தூத்துக்குடி வணிகர்கள் தங்களாலியன்றவரை பொருளுதவி செய்தனர். ஆனல் அது போதுமானதாய் இல்லை. சிதம்பரனர் பம்பாய், கல்கத்தா முதலிய பலவிடங்களுக்கும் சென்று பொருள் திரட்டினர். வடநாட்டு வணிக மக்களில் பலர் சுதேசிக் கப்பல் கம்பெனியின் பங்குதாரர்களாக ஆயினர். சிதம்பரனர் வட இந்தியா செல்லப் புறப்பட்டபோது 'மீண்டும் தமிழகம் திரும்பும்போது கப்பலுடன் திரும்புவேன். இல்லாவிட்டால் அங்கேயே கடலில் வீழ்ந்து மாள்வேன்' எனச் சபதம் செய்து சென்ருர்.

அவர் பம்பாய் சென்றிருந்தபோது ஊரில் அவரது ஒரே மகன் உலகநாதன் நோய்வாய்ப்பட்டு இறந்தான். மனைவியாரும் பூரண கர்ப்பவதி. சிதம்பரனரின் நண்பர்கள் இவைகளைக் கூறி ஊர் வந்து போக வேண்டினர். ''என் மகனையும் மனைவியையும் இறைவன் காப்பான்'' என்று கூறிச்சென்ருர். குடும்பக் கடமையை விட நாட்டுச் சேவையே பெரிதெனத் தோன்றியது அவருக்கு. பம்பாய் சென்ற சில மாதங்களுக்குப் பின்னர் சிதம்பரனர் கப்பலுடன் தூத்துக்குடித் துறைமுகம் வந்து சேர்ந்தார். கப்பலின் பெயர் 'காலியா' என்பதாகும். சிதம்பரனர் தம் சபதத்தை நிறைவேற்றியதைக் கண்டு தமிழ் மக்கள்

மகிழ்ச்சியடைந்தனர். 'லாவோ' என்ற மற்றொரு கப்பலை திரு எஸ். வேதமூர்த்தி பிரான்சுக்கு நேரில் சென்று வாங்கி வந்தார். உடன் இரண்டு இயந்திரப் படகுகளும் சேர்த்து வாங்கப் பட்டன.

இரு பெரும் கப்பல்களை ஒரே சமயத்தில் விலைக்கு வாங்கி வந்த சிதம்பரனாரின் சாதனையை இந்தியப் பத்திரிகைகள் பாராட்டின. பாரதியாரும் அப்போது தான் நடத்தி வந்த வாரப் பத்திரிகையான 'இந்தியா'வில் சிதம்பரனாரைப் பாராட்டி எழுதினார்: ''வெகுகாலமாகப் புத்திரப்பேறின்றி அருந்தவம் செய்து வந்த பெண்ணொருத்தி ஏக காலத்தில் இரண்டு புத்திரர்களைப் பெற்றால் எத்தனை அளவற்ற ஆனந்தமடைவாளோ அத்தனை அளவற்ற ஆனந்தத்தை நமது பொது மாதாவாகிய பாரதத்தாயும் இவ்விரண்டு கப்பல்களைப் பெற்றமைக்காக அடைவாளென்பது உறுதி'' எனக் கூறினார் கவியரசர் பாரதியார்.

சுதேசிக் கப்பலிலேயே பொருள்களை ஏற்றுவதென மக்கள் உறுதிபூண்டனர். அதைச் செயலிலும் காட்டினர். இதனால் சுதேசிக் கப்பல் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. சிலர் கட்டுப் பாட்டை மீறி வெள்ளையர் கப்பலில் பொருட்களை ஏற்றினர். பின்னர் சிதம்பரனாரின் வேண்டுகோளுக்கிணங்கி நல்வழிப்பட்டனர். பிரயாணிகளும் வெள்ளையர் கப்பல்களில் பிரயாணம் செய்வதை நிறுத்தினர். இதுகண்டு வெள்ளைக்கப்பல் கம்பெனியார் தங்கள் கப்பல் கட்டணங்களை வெகுவாகக் குறைத்தனர்; தரகர்களை அமர்த்திப் பிரயாணிகளை அழைத்தனர். இதற்கிடையில் சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு எதிராகப் பொய்ப் பிரசாரம் செய்தனர். சுதேசிக் கம்பெனியார் வணிகர்களிடம் உண்மையைக் கூறினர். வணிகர்களும் உண்மையறிந்து சுதேசிக் கப்பல் கம்பெனிக்கே ஆதரவு அளித்தனர்.

கட்டணங்களைக் குறைத்துப் பார்த்த பின்னும் வெள்ளையர் கப்பலில் பிரயாணம் செய்ய யாருமில்லை. கட்டணமே இல்லை. இலவசமாகப் பிரயாணம் செய்யலாம் என்றனர். அதுவும் பயன் தரவில்லை. இவற்றினால் மக்கள் மன உறுதியைக் குலைக்க முடியவில்லை. பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி முதலாளிகள் சிதம்பர னாரை அணுகி, சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு அவர் விலகு

வுதாயின் இலட்சம் ரூபாய்கள் தருவதாகக் கூறினர். சான்றோர் கள் பழிக்கக் கூடிய அச்செய்கையைச் சிதம்பரனுர் செய்ய மறுத்து விட்டார். பொருளுக்காக நாட்டைக் காட்டிக்கொடுக்க அவர் விரும்பவில்லை.

சிதம்பரனுர் கப்பல் வாணிபத்தோடு நில்லாமல் கைத் தொழில்—விவசாய வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினுர். தொழில்துறையில் அனுபவமுள்ள பலரின் உதவியுடன் "சென்னை விவ்சாயக் கைத்தொழிற் சங்கம் லிமிடெட்" ஒன்றைத் துவக் கினுர். பங்கு ஒன்றுக்கு பத்து ரூபாய் வீதம் பத்தாயிரம் ரூபாய் சேர்ப்பதென முடிவு செய்தார். ஏழைத் தொழிலாளர்களும், உழவர்களும் சங்கத்தில் சேர்ந்தனர். இத்துடன் "தரும சங்க நெசவுசாலை", "தேசீயப் பண்டகசாலை" என்ற இரு துணை ஸ்தாப னங்களையும் துவக்கினுர்.

வடக்கே வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கத்தால் ஆங்கில சாம்ராஜ்யம் ஆட்டம் கண்டிருந்தது. வாணிபச் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினுர் சிதம்பரனுர். இதனுல் சாம் ராஜ்யம் அழிந்துவிடும் என ஆங்கிலேயர் அச்சம் கொண்டனர். பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி முதலாளிகளுடன் அரசாங்க அதிகாரி களும் சேர்ந்துகொண்டனர். அவர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியை அழிக்க முயன்றனர். சப்-மாஜிஸ்திரேட் வாலர் என்பவர் இந்திய அதிகாரிகள் யாரும் சுதேசிக் கப்பலில் பிரயாணம் செய்யக்கூடாது என்று ரகசியச் சுற்றறிக்கை அனுப் பினுர். வெள்ளை அதிகாரிகள் இந்திய வணிகர்களை மிரட்டினர், சுதேசிக் கப்பலில் பிரயாணம் செய்யக்கூடாது என்று. இந்திய உயர்தர அதிகாரிகளும் சுதேசிக் கம்பெனியை அழிக்க உதவ வேண்டுமென்றனர். சில இந்திய அதிகாரிகள் பொய்க் காரணங் கள் கூறி ஓய்வு பெற்றனர். பலர் வெளி ஜில்லாக்களுக்கு மாற்றிக் கொண்டனர்.

சுதேசிக் கப்பல், பிரிட்டிஷ் கப்பலொன்றின்மீது மோத முயன்றதாக அதிகாரிகளிடம் புகார் செய்தனர் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியார். அதுமுதல் பிரிட்டிஷ் கப்பல் புறப்பட்ட பின்னரே சுதேசிக்கப்பல் புறப்பட வேண்டுமென சப்-மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். பிரிட்டிஷ் கப்பலில் பிரயாணிகளை ஏற்றுவதற்

காக இவ்வாறு சூழ்ச்சி செய்தனர். இதை எதிர்த்து ஜில்லா மாஜிஸ்திரேட்டிடம் அப்பீல் செய்தனர் சுதேசிக் கம்பெனியினர். தங்கள் கப்பல் பிரிட்டிஷ் கப்பலுடன் மோத முயன்றதில்லை என நிரூபித்தனர். உண்மையறிந்த ஜில்லா மாஜிஸ்திரேட் சுதேசிக்கப்பல் எந்த நேரத்திலும் புறப்பட உரிமை உண்டெனத் தீர்ப்பளித்தார். கடற்சுங்க அதிகாரிகள், டாக்டர்கள், துறைமுக அதிகாரிகள் அனைவரும் சுதேசிக்கப்பலில் பிரயாணம் செய்வோருக்குத் தொல்லை அளித்தனர்.

## 6. நாட்டுத்தொண்டு

சிதம்பரனர் அரசியலிலும் கலந்து பணியாற்றினர். நீண்ட கால அடிமைத்தனத்தின் பயனாக, இந்திய நாட்டின் செம்மையெல்லாம் பாழாகிவிட்டது கண்டு வருந்தினர். குடிமக்களின் சொற்படி நடக்கும் குடியரசை அமைப்பதே தமது வேலையென எண்ணினர். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற இந்தியமக்களின் தாய்ச் சபையாம் காங்கிரஸ் மகாசபையில் சேரலானர்.

ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதியாகச் சென்று வந்தார். அப்போது அச்சபையில் பணக்காரர்களும், வக்கீல்களுமே அச்சபையை நடத்தி வந்தனர். அவர்களே இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். ஒரு பிரிவினர் மிதவாதிகள். மற்ருெரு பிரிவினர் தீவிரவாதிகள். சிதம்பரனர் தீவிரவாதிகள் பிரிவைச் சேர்ந்தவர். காங்கிரசில் மிதவாதிகளே மிகுந்திருந்தனர். செல்வாக்கும் நிறையப் பெற்றிருந்தனர். ஆண்டுதோறும் சபையைக் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றுவதும் சரமாரியாகப் பேசுவதையுமே இவர்கள் செய்துவந்தனர். அவர்கள் செயலில் எதுவும் செய்யத் துணிவு பெறவில்லை.

1907-ஆம் ஆண்டு சூரத் நகரில் காங்கிரஸ் கூடியது. காங்கிரஸ் பிரதிநிதிகள் விடுதியில் மகான் அரவிந்தர், லாலா லஜபதி போன்ற தீவிரவாதத் தலைவர்களும் வேறு பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்தனர். அச்சமயம் அரவிந்தர் மற்றவர்களை நோக்கி "என் பிள்ளையவர்கள் எங்கே?" என்று கேட்டார். யாவரும் திகைத்து அமர்ந்திருந்தனர். உடனே அரவிந்தர் விளக்கமாக "அவர்தாம், புகழ்பெற்ற தேசபக்தர், தூத்துக்குடிச் சிதம்பரம்பிள்ளை," என்ருர். எல்லோருக்கும் இவ்வார்த்தைகள் தூக்கி வாரிப்போட்டதைப் போலிருந்தன. சிதம்பரனர் அச்

சமயம் அங்கு வர அரவிந்தர் அவரை அன்போடு அணைத்துக் கொண்டார்.

இந்த மகாசபையில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால் குழப்பம் ஏற்பட்டது. அதன் பின்னர் லோகமான்ய திலகர் தலைமையில் தீவிரவாதிகள் ஒன்று கூடினர். தங்கள் முற்போக்குக் கொள்கைகளை நாடெங்கும் பரப்ப முடிவு செய்தனர். அதன் மூலமாக மக்களைச் சுதந்திரப் போருக்குத் தயார் செய்யத் தீர்மானித்தனர். தமிழ்நாட்டில் தமது கொள்கைக்கு ஆதரவு தேடவேண்டிய பொறுப்பினைத் திலகர் சிதம்பரனாரிடம் ஒப்படைத்தார். "தென்னாட்டிலேயே சிறந்த வீரர் சிதம்பரம்பிள்ளை ஒருவர்தாம் என்பது திலகரின் கருத்து" என்று ராஜாஜி சென்னையில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினார்.

அந்நிய ஆட்சியினால் விளையும் தீமைகளைப் பொதுமக்களிடம் விளக்கமாகக் கூறி, அவர்களைத் தேசாபிமானிகளாகச் செய்யும் நோக்கத்துடன் சங்கம் ஒன்றினை 1908-ஆம் ஆண்டில் நிறுவினர். அதற்குத் 'தேசாபிமான சங்கம்' எனப் பெயரிட்டார். அடிக்கடி பொதுக்கூட்டங்கள் கூட்டினர். அதில் சுதேசிப் பற்று, அந்நியச் சாமான்கள் விலக்கு, தேசியக்கல்வி ஆகியவற்றின் அவசியத்தை விளக்கிப் பிரசாரம் செய்தனர் அச்சங்கத்தினர். ஆங்கிலத்தில் பேசுவதே பெருமை, தமிழில் பேசுவது சிறுமை என்று எண்ணிய காலம் அது. அப்போது காங்கிரஸில் ஏழை மக்கள் சேரவில்லை. அவர்களிடம் பைந்தமிழில் பேசித் சுதந்திரப்போருக்குத் தமிழர்களைத் தட்டியெழுப்பினர். சங்கம் வளர்பிறை போல நாளுக்கு நாள் வளர்வதாயிற்று. இந்தப் பெருமை சிதம்பரனாரையே சாரும்.

சுப்பிரமணிய சிவா என்பவர் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த வத்தலக்குண்டில் கிராம முன்சீபின் மகனாகப் பிறந்தவர். இளமையிலேயே குடும்ப வாழ்க்கையை வெறுத்துத் துறவு பூண்டவர். தமிழறிவும், ஆங்கில ஞானமும் பெற்றவர். இல்லறத்தை வெறுத்த போதும் அவர் நாட்டை வெறுக்கவில்லை. இயற்கையாகவே புரட்சி உள்ளம் பெற்றவராக இருந்தார் சிவா. நாட்டில் வளர்ந்துவந்த விடுதலை இயக்கத்தினால் புத்துணர்ச்சி பெற்றார். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். நினைத்ததை நினைத்த

படியே செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர். தன்னந்தனியே கிராமம் கிராமமாகச் சென்று சுதேசிப்பிரசாரம் செய்து வந்தார். அவர் 1907-ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்தார். தேசாபி மான சங்கத்தார் அவரது வருகையை அறிந்தனர். அவரைத் தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். சிவா பொதுக்கூட்டங்களில் தொடர்ந்து பேசிவந்தார். அவரது சொற் பொழிவைக் கேட்க மிகத்தொலேவிலிருந்தும் மக்கள் வந்தனர். சிவா தூத்துக்குடி சென்று அங்கும் பிரசாரம் செய்தார். கப்பல் கம்பெனி வேலே முடிந்தவுடன் சிதம்பரனுர் தினமும் சிவாவின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தார். சிவாவிற்கு வயது இருபத்து மூன்றுதான். சிவாவின் துறவிக்கோலமும், துடிதுடிப்பான பேச்சும் சிதம்பரனுரைக் கவர்ந்தன. சிதம்பரனுரும், சிவாவும் பிரியா நட்புக்கொண்டனர்.

பொதுமக்கள் வற்புறுத்தலின் பேரில் சிதம்பரனுரும் பொதுக் கூட்டங்களில் பேச ஆரம்பித்தார். சிவாவின் பேச்சில் கனல் பறக்கும். சிதம்பரனுரின் பேச்சு சூறைக்காற்றுப் போலச் சுழன்று வரும். இதனுல் மக்கள் மனத்தில் நாட்டுப்பற்று நன்கு சுடர்விட்டு எரியலாயிற்று.

தங்கள் கூலி விகிதங்களே உயர்த்த வேண்டுமென்று தூத்துக்குடி கோரல் மில் (இப்போது ஹார்விமில்) தொழிலாளர் கள் வெள்ளே முதலாளிகளிடம் வேண்டிக்கொண்டனர். நிர் வாகிகள் சம்மதிக்கவில்லே. தொழிலாளர்கள் ஒற்றுமையாக வேலே நிறுத்தம் செய்தனர். வேலே நிறுத்தம் காரணமாக அவர்கள் மனேவி மக்களுடன் பட்டினி கிடக்க நேர்ந்தது. அப்போது சிதம்பரனுர் சில வழக்கறிஞர்களின் துணேயுடன் பணம் வசூலித் தார். அந்தப் பணத்தை கோரல் மில் தொழிலாளர்கள் குடும்பங் களேக் காப்பாற்றச் செலவழித்தார். சிதம்பரனுரின் வேண்டு கோளுக்கிணங்கி வேலே நிறுத்தம் செய்த இரண்டாயிரம் பேர் களில் ஆயிரம் பேருக்குத் தூத்துக்குடி மக்கள் வேறு வேலேகள் கொடுத்தனர். வேலேநிறுத்தம் நடந்த அத்தனே நாட்களிலும் பொதுக்கூட்டம் நடைபெறும். அதில் சிதம்பரனுர் பேசுவார். தொழிலாளிகளின் கோரிக்கை நிறைவேறும்வரை பணியக் கூடாது என்பார். அவரது பேச்சால் தொழிலாளர்கள் உறுதியும்

ஊக்கமும் பெற்றனர். வேலைநிறுத்தம் தொடர்ந்து நடந்தது. மில் முதலாளிகள் சிதம்பரனார்மீது கோபம் கொண்டனர். சிதம்பரனார் வேலைநிறுத்தம் செய்யத் தூண்டியதாய் அவர்மீது வழக்குத் தொடுத்தனர். அவரது பேச்சினால் ஊரில் கலகம் ஏற்படும் என்று அவர்கள் கூறினர். மாஜிஸ்திரேட் சிதம்பரனாரை நேரில் அழைத்து, அவர் எந்தப் பொதுக்கூட்டத்திலும் பேசக் கூடாது என்று கூறினார். அவரது சொற்பொழிவால் ஊரில் அமைதி குலையும் என்று தாம் நினைப்பதாகக் கூறினார். சிதம்பரனார் அவரது எச்சரிக்கையை மதிக்கவில்லை; தொடர்ந்து தொழிலாளர்கள் கூட்டத்தில் பேசி வந்தார்.

கோரல் மில் வேலைநிறுத்தச் செய்தி மதுரையை எட்டியது. மதுரையில் உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்லவில்லை. தூத்துக்குடி வேலை நிறுத்தம் ஒருவாரம் வரை நீடித்தது. மில் முதலாளிகள், தொழிலாளர்களுக்குப் பணி வதைத் தவிர வேறு வழி இல்லை. கூலியை அரைப்பங்கு உயர்த்த ஒப்புக்கொண்டனர். அதன் பின்னரே தொழிலாளர்கள் வேலைக் குச் சென்றனர். சிதம்பரம்பிள்ளையின் சொற்பொழிவுகளால் மக்கள் மனத்தில் நாட்டுப்பற்று பொங்கிபெழுவதைக் கண்டு அதிகாரிகள் பயந்தனர். கலகம் நிகழாமல் தடுப்பதற்காகத் தூத்துக்குடியில் அதிகப் போலீஸ்படை வைக்க விரும்பினர். பெரும்பாலோர் இதை எதிர்த்தனர். ஆனால் வழக்கறிஞர் திரு. அரங்கசாமி மட்டும் மனப்பூர்வமாக ஆதரித்தார். அவரது செய்கையை ஊரார் வெறுத்தனர். ஒருநாள் அவ்வழக்கறிஞர் சவரம் செய்துகொள்வதற்காகச் சவரத்தொழிலாளி ஒருவரை அழைத்தார். அத்தொழிலாளி வழக்கறிஞரிடம் "நீங்கள் மட்டும் அதிகப் போலீஸ் படை வேண்டும் என்றீர்களாமே," என்று கேட்டார். "அதுபற்றி உனக்கென்ன? அது உன் வேலையல்ல" என்றார். "அப்படியானால் உமக்குச் சவரம் செய்வதும் என் வேலையல்ல," என்று சொல்லி, அரைகுறையாகச் செய்ததோடு நிறுத்திவிட்டு, அத்தொழிலாளி சென்றுவிட்டார். வேறு தொழிலாளிகளும் மறுத்துவிட்டனர். பின்னர் அவர் ரயிலேறித் திருநெல்வேலி சென்று மீதியுள்ள சிகையை எடுத்துக்கொண்டு வந்தார்.

சிதம்பரனார் சுதேசித் தொழில்களை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறுவார். "விலைகள் அதிகமாயிற்றே" என்று கேட்டால் 'நீங்கள் கொடுப்பது உங்கள் சகோதரர்களுக்குத் தானே' என்பார். தூத்துக்குடியில் சுதேசிக் கிளர்ச்சி அரசியல் புரட்சியாக மாறிற்று. அதை அறிந்த அதிகாரிகள் எவரும் ஆயுதங்களையோ தடிக்கம்புகளையோ எடுத்துச் செல்லக் கூடாது எனத் தடை போட்டனர். இதை அறிந்த சிதம்பரனார் ஆத்திரப்பட்டார். வேல்பிடித்த வீரத் தமிழரின் கைகள் வெறும் கோல்கள் பிடிக்க உரிமையற்றுப் போனதைக் கண்டார். அந்த ஆணையை மீறுமாறு கட்டளையிட்டார் தம் மக்களுக்கு. அடிமைத்தனத்தால் மக்கள் படும் அவதி கண்டு வருந்துவார். ஆளப்பிறந்த நம்மை ஆறாயிரம் மைலுக்கப் பாலிருந்து வந்த வெள்ளையனா ஆளுவது என்பார். இதனால் மக்கள் மனத்தில் கிளர்ச்சி பொங்கியெழும். இதுவே திருநெல்வேலிப் புரட்சிக்குக் காரணமாயிற்று. சிதம்பரனார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் படை திரட்டினார். சவரத் தொழிலாளிகள், வண்டி ஓட்டுவோர் முதலிய பாட்டாளி மக்கள் அவரது படையில் சேர்ந்தனர்.

# 7. லாபத்துக்காகவா ?

இந்தியத் தேசீய காங்கிரஸ் முன்னணித் தலைவர்களுள் சந்திரபாலர் ஒருவர். வங்காளத்தைச் சேர்ந்தவர். நாவன்மையில் அவருக்கு நிகர் அவரே. அச்சமயம் அரவிந்த கோஷ் என்ற காங்கிரஸ் தீவிரக் கட்சித் தலைவர் மீது சதிவழக்கு நடைபெற்றது. அரசாங்கத் தரப்பில் சாட்சி சொல்ல விபின சந்திரபாலர் மறுத்தார். கோர்ட்டை அவமதித்த குற்றத்திற்காக ஆறுமாதச் சிறைத் தண்டனை அடைந்தார். 1903-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒன்பதாம் தேதி சந்திரபாலர் விடுதலை பெற்றார். அந்நாளை திருநெல்வேலி மக்கள் திருநாளாகக் கொண்டாட முடிவுசெய்தனர். இதை அறிந்த சர்க்கார் அதிகாரிகள் கவலை கொண்டனர். தூத்துக்குடியில் 9-ஆம் தேதியன்று ஊர்வலமோ, பொதுக்கூட்டமோ நடத்தக் கூடாதெனத் தடையுத்தரவு பிறப்பித்தனர். மாஜிஸ்திரேட் சிதம்பரம்பிள்ளையை நேரில் வரவழைத்து, பாலர் விடுதலைக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாதென எச்சரித்தார். சிதம்பரனார் மாஜிஸ்திரேட்டை அவ்வாறு எழுதித்தர வேண்டிய போது, மாஜிஸ்திரேட் மறுத்து விட்டார்.

பிள்ளையின் தீவிரப்போக்கு சுதேசிக் கப்பல் கம்பெனி நிர்வாகிகளுக்குப் பிடிக்கவில்லை. அதிகாரிகளின் அடக்குமுறையைக் கண்டு பயந்தனர். நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டத்தைக் கூட்டினர். கம்பெனியின் நன்மை கருதி சிதம்பரனார் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது எனத் தீர்மானித்தனர். இம்முடிவு கண்டு சிதம்பரனார் மனம் வருந்தினார்.

லாபம் கருதியே பலர் சுதேசிக் கப்பல் கம்பெனியில் பங்குதாரராகச் சேர்ந்தனர். நாடு எப்படித் துன்பப்பட்டாலும் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால் சிதம்பரனாரின் நோக்கமே வேறு.

பொருளுக்காகவோ, புகழுக்காகவோ அவர் ஆசைப்படவில்லை. இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிக்கொண்டிருக்கும் வெள்ளை வணிகக் கூட்டத்தை இந்தியாவிலிருந்து விரட்டுவதே அவர் நோக்கம். ஆகவே, சிதம்பரனார் கம்பெனி நிர்வாகிகளின் தீர்மானப்படி நடக்க மறுத்துவிட்டார். கம்பெனி நிர்வாகிகள் மட்டுமன்றி, அவருடைய நெருங்கிய நண்பர்கள் பலரும் சிதம்பரனாரை அரசியலில் ஈடுபடவேண்டாமெனக் கேட்டுக்கொண்டனர். ''சுதேசியத்தை வளர்ப்பதோடு நாம் நின்றுவிடுவோம். அந்நியப் பொருள்கள் பகிஷ்கரிப்பை மற்றவர்கள் செய்யட்டும்'' எனக் கூறினர். இது சிதம்பரனாருக்குப் பிடிக்கவில்லை. சுதந்திரப் போருக்குத் துணை புரியவே கப்பல் கம்பெனியைத் துவக்கினார் சிதம்பரனார். இதை ஆங்கிலேயர்கள் நன்கு அறிந்திருந்தனர். அதனாலேயே அவர்கள் கப்பல் கம்பெனியை கலைக்கப் பார்த்தனர். கலெக்டரின் எச்சரிக்கைக்கு அவர் சிறிதும் அஞ்சவில்லை. கம்பெனி நிர்வாகிகளின் கட்டளையையும் அவர் சற்றும் மதிக்கவில்லை.

ஏற்பாட்டின்படியே மார்ச் 9-ஆம் தேதியன்று விபினசந்திர பாலரின் விடுதலைத் திருநாள் சிறப்பாகத் திருநெல்வேலியில் நடைபெற்றது. போலீஸ் அதிகாரிகள் முன்னெச்சரிக்கையாக ஏற்பாடுகள் செய்திருந்தனர். சிதம்பரனாரும், சிவாவும் தடையுத்தரவை மீறி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். பொதுக் கூட்டத்திலும் பேசினர். இவ்விதம் வங்காளத்தையும் மிஞ்சி நின்றது திருநெல்வேலி. எங்கும் சுதந்திரப் பேச்சு. வந்தே மாதர முழக்கம். வெள்ளையரையும், அதிகாரிகளையும் வெறுத்தனர். அந்நிய ஆடை அணிந்தவரைக் கண்டாலே கோபம் கொண்டனர். திருநெல்வேலி முழுவதும் சிதம்பரனார் இட்டது சட்டமாயிற்று. அவர் சொல்லுக்கு மறு சொல் கிடையாது. அவரது ஆணை பிறந்தால் அனலையே விழுங்கத் தயாராயிருந்தனர் மக்கள்.

# 8. கைதி

சிதரம்பரனாரின் தீவிரப் போக்கையும், பொதுமக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கையும் கண்டு ஆங்கிலேய அதிகாரிகள் அச்சம் கொண்டனர். சிதம்பரனாரைச் சிறை செய்தே தீர வேண்டும் எனத் தீர்மானித்தனர். தூத்துக்குடியில் கைது செய்தால் கலகம் விளையும் என்று ஆங்கிலேயர்கள் அறிந்தனர். அதற்கு அஞ்சி சுப்பிரமணிய சிவாவையும், சிதம்பரனாரையும் திருநெல்வேலிக்கு வரும்படி ஆணை அனுப்பினர் கலெக்டர் விஞ்ச்.

சிதம்பரனார் திருநெல்வேலி செல்லத் தீர்மானித்தார். சிவாவைத் தவிர மற்ற நண்பர்கள் தடுத்தனர். சிதம்பரனாரைக் கலெக்டர் விஞ்ச் திருநெல்வேலியில் சிறைப்படுத்திவிடுவார் என நம்பினர். சிதம்பரனாரும் இதனை அறிவார். செல்லாதிருந்தால் தொல்லை அதிகமாகுமேயொழியக் குறையாது என்பதையும் அவர் நன்கு அறிவார். நண்பர்களுக்கு ஆறுதல் கூறி, சிவாவுடன் திருநெல்வேலிக்குச் சென்றார். அங்கு மார்ச் 12-ஆம் தேதி கலெக்டரைப் பேட்டி கண்டார். அப்பேட்டியில் சிதம்பரனார் மீது சீறி விழுந்தார் கலெக்டர் விஞ்ச். விஞ்சின் சீற்றம் கண்டு சிதம்பரனார் அஞ்சவில்லை. சிதம்பரனார் கப்பலோட்டியது முதற்குற்றம்; அனுமதியின்றிக் கூட்டம் கூட்டியது இரண்டாவது குற்றம்; பாமர மக்களை 'வந்தேமாதரம்' என்று கோஷிக்குமாறு தூண்டியது மூன்றாவது குற்றம் என்றார் கலெக்டர் விஞ்ச். அதற்குச் சிதரம்பரனார், ''எங்கள் நாட்டில் நாங்கள் கூடிப் பேச உங்கள் அனுமதி வேண்டுமோ? தாய்நாடு வாழ்க என்று கோஷிப்பது குற்றமா? எங்கள் வாணிபம் வளர, வளம் பல பெருகக் கப்பல் ஓட்டுவது குற்றமா? சதையைத் துண்டு துண்டாக வெட்டி எடுத்து வேதனைப்படுத்தினாலும் எங்கள் முடிவு மாறாது. இதயத்தே வளரும் சுதந்திரப் பற்றும் மாயாது. இது திண்ணம்''

என்றார். "வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை வாழ்த்துவேன்" என்று அஞ்சாது கூறினர்.

சிதம்பரனாரின் பதில் கண்டு கலெக்டர் விஞ்சின் கோபம் அதிகரித்தது. திருநெல்வேலியை விட்டு உடனே வெளியேற வேண்டுமென்றார். மேலும் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதில்லை என நன்னடத்தை ஜாமீன் தரவேண்டுமென்று சிதம்பரனாரிடம் கலெக்டர் கூறினர். சிதம்பரனார் ஜாமீன் தர இயலாதென்று கூறினர். திருநெல்வேலியை விட்டு வெளியேறவும் மறுத்தார். வேண்டுமானால் தம்மைக் கைது செய்யலாமெனக் கூறினர். உடனே சிதம்பரனாரும், சிவாவும் கைது செய்யப் பட்டனர். சிதம்பரனார் இல்லத்தைச் சோதனையிட்டுச் சில கடிதங்களைக் கைப்பற்றினர்.

சிதம்பரனார் கைது செய்யப்பட்ட செய்தி காட்டுத்தீ போலத் திருநெல்வேலி முழுவதும் சிறிது நேரத்திற்குள் பரவிவிட்டது. மறுநாள் வர்த்தகர்கள் கடையடைத்தனர். மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. தேச பக்தர்களும் தேசீய ஸ்தாபனங்களும் சிதம்பரனாரைக் கைது செய்ததைக் கண்டித்துப் பொதுக் கூட்டங்களில் பேசினர். ஊர் முழுவதும் ஒரே கொந்தளிப்பாயிருந்தது. நகரின் அமைதிகாக்கப் போலீஸ் படை தருவிக்கப் பட்டது. தொழிலாளர்கள் நகரின் பல பாகங்களிலும் ஊர்வலம் சென்றனர். முனிசிபல் மண்ணெண்ணெய்க் கிடங்கைத் தீக்கிரையாக்கினர். சிலர் முனிசிபல் காரியாலயத்திற்குள் புகுந்து அங்கிருந்த பொருள்களையெல்லாம் நெருப்பிட்டுக் கொளுத்தினர். சர்ச் மிஷன் கல்லூரியில் இருந்த சாமான்களையெல்லாம் உடைத்து வீதியில் எறிந்தனர். போலீஸ் ஸ்டேஷன் கட்டடத்தையும் தீவைத்துக் கொளுத்தினர். விஷயம் அறிந்த கலெக்டரும், போலீஸ் சூப்பரின்டெண்டும் ஸ்தலத்திற்குச் சென்று கலகத்தை அடக்க முயன்றனர். டிப்டி கலெக்டர் ஆஷ் தம் கைத்துப்பாக்கியால் கலகக்காரர்களை நோக்கிச் சுட்டார். இதனால் நால்வர் மாண்டனர். மூவர் படுகாயம் அடைந்தனர். இறந்த நால்வருள் இருவர் இந்துக்கள். ஒருவர் முஸ்லீம். மற்றொருவர் ஆதித் தமிழர். இறந்தவர்களின் பிரேதங்களை அப்புறப்படுத்தவில்லை அதிகாரிகள். அப்படியே விட்டுச் சென்றனர். பின்னர் மாலையில்

இறந்தவர்களின் உறவினர்கள் வந்து பிணங்களை எடுத்துச் சென்றனர்.

கலகக்காரர்கள் கற்களால் அடித்ததால் இன்ஸ்பெக்டருக்கு மண்டை உடைந்தது. கலெக்டரும் காயம் அடைந்தார். மூன்று நாட்கள் வரை ஒரே குழப்பம். சாதாரணப் போலீசாரால் நிலைமையைச் சமாளிக்கமுடியாது என்பதை உணர்ந்தனர் ஆங்கிலேயர்கள். சென்னை சர்க்கார் தண்டப் போலீஸ் படையைத் திருநெல்வேலிக்கும், தூத்துக்குடிக்கும், தச்சநல்லூருக்கும் அனுப்பினர். அதற்கான செலவுத் தொகையைப் பொதுமக்களிடமே வசூல் செய்வதெனத் தீர்மானித்தனர். திருநெல்வேலி ஜில்லாவில் இருந்த வெள்ளையர்கள் வீட்டிலெல்லாம் ராணுவத்தினர் காவல் காத்தனர். கனம் குருசாமி ஐயரும் மற்றும் இரு பிரமுகர்களும் சென்னை வந்து கவர்னரைக் கண்டு தண்டப் போலீசாரை நீக்க வேண்டினர். ஆனால் அவர்கள் எமாற்றத்துடன் திரும்பவேண்டியதாயிற்று.

இக்குழப்பத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறிப் போலீசார் திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகிய இடங்களில் 89 பேர்களைக் கைது செய்தனர். அதில் ஒருவர் விடுதலையானார். மற்றவர்கள் பலவிதத் தண்டனைகள் அடைந்தனர்.

## 9. எலும்புக்கூடும் ராஜத்துரோகி !

சிதம்பரம்பிள்ளை, சிவா ஆகியோர்களின் வழக்கு திரு நெல்வேலி ஜில்லா அடிஷனல் மாஜிஸ்திரேட் ஈ. எச். வாலேஸ் முன்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சிதம்பரம் பிள்ளைக்காகத் தஞ்சை வக்கீல் திரு என். கே. ராமசாமி கோர்ட்டில் தோன்றி வாதாடினர். மாஜிஸ்திரேட் தனது வக்கீலிடம் நேர்மை யாக நடந்துகொள்ளாதது கண்டு சிதம்பரனர் எதிர் வழக்காட மறுத்துவிட்டார். வாலேஸ் வழக்கை ஜில்லா செஷன்ஸ் கோர்ட் டிற்கு மாற்றினர். செஷன்ஸ் கோர்ட்டில் வழக்கு இரண்டு மாதம் நடைபெற்றது. திருவாளர்கள் சடகோபாச்சாரியார், நரசிம்மாச் சாரியார், வேங்கடாச்சாரியார் ஆகியோர் சிதம்பரனருக்காக வாதித்தனர். சர்க்கார் தரப்பில் பாரிஸ்டர் பவல், ரிச்மண்ட் ஆகியோர் வாதிட்டனர்.

கவியரசர் பாரதியார் சிதம்பரனர் தரப்பில் சாட்சி கூறினர். அவர் உட்பட பலர் சாட்சி கூறினர். சிதம்பரனருக்கு விரோத மாய்ச் சாட்சி சொல்லவும் இருந்தனர் சிலர்; அவர்கள் போலீஸ் காரர்களும், வெள்ளைக் கப்பல் கம்பெனி அதிகாரிகளுமே ஆவர்.

தீர்ப்பு ஜூலை மாதம் 7-ஆம் தேதி கூறப்பட்டது. சிதம்பரனர் குற்றவாளி எனத் தீர்மானித்தனர். அவருக்கு நாற்பது வருடம் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டது. அரச நிந்தனைக்காக இருபது வருடம்; சிவாவிற்கு உடந்தையாக இருந்ததற்காக இருபது வருடம். சிவாவிற்கு அரச நிந்தனைக் காகப் பத்தாண்டுகள் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்டது.

நீதிபதி பின்ஹே தமது தீர்ப்பில், "சிதம்பரம்பிள்ளை பெரிய ராஜத்துரோகி. அவரது எலும்புக்கூடுகூட ராஜவிசுவாசத்திற்கு விரோதமானது. சிவா அவர் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல்வேலிக் குழப்பத்திற்குக் காரணம் இவர்கள்தாம்.

பிள்ளையின் பிரசங்கத்தையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும். புரட்சி ஓங்கி எழும்'' என்று கூறினர்.

ஏழைகள்பால் இரக்கம்கொண்ட சிதம்பரனாரைக் கொலையும், கொள்ளையும் புரிந்த கொடியோர்களுடன் வாழத் தீர்ப்பளித்தார். அந்தமான் தீவில் அவர் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி பின்ஹே கூறினர். முப்பத்தைந்தே வயதுடைய சிதம்பரனார் தாய்தந்தையாரையும், மனைவியையும், இரு பாலகர் களையும் பிரிய நேரிட்டது. சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனையினைக் கேட்டு அவர் சகோதரரான மீனாட்சி சுந்தரம் என்பார் பித்தரானார். அவர் பித்தராகவே வாழ்நாள் முழு வதையும் கழித்து 1943-இல் காலமானர்.

தமக்கு அளிக்கப்பட்ட கொடுந்தண்டனையைக் கேட்டு வருந்தவில்லை வீரத்தமிழரான சிதம்பரனார். கோர்ட்டிலிருந்து சிறைக்குச் செல்லும்போது முகவாட்டத்துடன் எதிரில் நின்று கொண்டிருந்த தூத்துக்குடி மாசிலாமணிப்பிள்ளையை நோக்கி, ''தம்பி, பயப்படாதே. இருக்கிறது ஹைக்கோர்ட், அடித்துத் தள்ளி வந்துவிடுகிறேன்'' எனக் கூறினர்.

தென்னிந்தியாவில் சிதம்பரனார் தண்டனை அடைந்த அதே வாரத்தில் ''கேசரி'' என்ற வடஇந்தியப் பத்திரிகையில் அர சாங்க விரோதமான கட்டுரையொன்று எழுதியதற்காகத் திலகர் குற்றம் சாட்டப்பட்டார். அதற்காக ஆறு வருடத் தீவாந்தரமும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. குருவும் சீடரும் ஒரே சமயத்தில் சிறை சென்றனர்.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவெங்கிலும் சிதம்பர னாருக்கு விதிக்கப்பட்ட கடுந்தண்டனையால் அதிர்ச்சி உண்டா யிற்று. பத்திரிகைகள் நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பைக் கடுமை யாகத் தாக்கித் தலையங்கங்கள் எழுதின. 'வங்காளி' என்ற பத்திரிகை 'நீதிபதி பின்ஹேயின் சித்தாந்தங்கள் இந்நாட்டில் அமுலுக்கு வரும் நாள் மக்களுக்குக் கெட்ட நாளாகும்' என எழுதிற்று. 'அமிர்த பஜார்' என்ற பத்திரிகை ''இந்த அநீதி பிள்ளையைத் தவிர உலகில் வேறு எந்த மனிதருக்கும் நேர்ந் திராது. அந்த வீரப் பெருமகனுக்குத் தலை வணங்குகிறோம்.

இக் கொடுந்தண்டனையால் பிரிட்டிஷ் நீதி நிர்வாகத்திற்கே அப கீர்த்தி உண்டாகிவிட்டது'' என்று எழுதிற்று. 'சுதேசமித்திரன்' என்ற பத்திரிகை, ''தூத்துக்குடிச் சிதம்பரம்பிள்ளைக்கு நேர்ந் துள்ள துன்பத்தைக் கேட்டு இந்தியா முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. நினைக்கையிலேயே மயிர்க் கூச்செறிகிறது ; கை கூசுகிறது. இந்தத் துக்கத்தைத் தென்இந்திய மக்கள் எப்படிச் சகிப்பார்கள் ? இவ்வளவு கொடிய தண்டனை விதிக்கப் படுமென்று நாம் கனவிலும் கருதவில்லை'' எனப் பிரசுரித்தது.


பிள்ளையவர்களுக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனையை வெள்ளையர் பத்திரிகைகளும் வெறுத்து எழுதின. 'ஸ்டேட்ஸ்மன்' என்ற பத்திரிகை ''தேசபக்தர் சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயத்திற்கும் சட்டத்திற்கும் விரோதமானது. பிள்ளையவர்கள் தியாகம் மகத்தானது'' என்று எழுதியது. அவ் வாறே 'ஸ்டாண்டர்ட்' என்ற பத்திரிகையும் நீதிபதி பின்ஹேயைத் தாக்கி எழுதியது.

சிதம்பரனாருக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் கேட்டு ஆந்திர தேசபக்தர்களும் அதிர்ச்சியுற்றனர். கண்டனக் கூட்டங் களும், ஊர்வலங்களும் கணக்கின்றி நடைபெற்றன. பெஜவாடா விலிருந்து வந்துகொண்டிருந்த 'சுயராஜ்யா' என்ற தெலுங்கு வாரப்பத்திரிகை பின்ஹேயைக் கண்டித்து எழுதியது. அத் தலையங்கம் பலாத்காரத்தைத் தூண்டுவதாய்க் காரணம் காட்டினர் வெள்ளையர்கள். பத்திரிகை அலுவலகத்தையும் பூட்டிவிட்டனர் போலீஸ் அதிகாரிகள். பின்னர் அந்த ஆசிரியருக்குக் கடுந்தண்டனை அளிக்கப்பட்டது. கவியரசர் பாரதியார் ஆசிரி யராய் இருந்த 'இந்தியா' என்ற தமிழ் வாரப் பத்திரிகைக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. பின்ஹேயைக் கண்டித்தும் சிதம்பரனாரைப் பின்பற்ற வேண்டும் மக்கள் என்றும் தலையங்கம் அதில் வெளி யிடப்பட்டது. அதற்காக அப்பத்திரிகையை வெளியிடுபவரான திரு சீநிவாசய்யங்கார் தண்டிக்கப்பட்டார். இதனால் 'இந்தியா' பத்திரிகையின் அலுவலகம் பிரெஞ்சு ஆட்சியின் கீழுள்ள புதுவைக்கு மாற்றப்பட்டது.

சிதம்பரனாருக்கு 40 வருடம் தீவாந்தரத் தண்டனை விதிக்கப் பட்டபோது இந்தியா மந்திரியாக லார்டு மார்லி என்பவர் இருந்

தார். அவர் சிதம்பரனருக்கு விதிக்கப்பட்ட கொடுந்தண்டனை பற்றி அறிந்தார். ராஜப் பிரதிநிதி லார்டு மின்டோவிற்கு சிதம்பரனருக்கும், சிவாவிற்கும் விதிக்கப்பட்டுள்ள தண்டனையைத் தம்மால் ஆதரிக்க இயலாது என்று எழுதினர். அத்தண்டனைகள் நிலைக்கா என்று எழுதினர். நீதிபதி பின்ஹே வேறு மாகாணத்திற்கு மாற்றப்பட்டார்.

சிதம்பரனர் தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று சென்னை ஹைக்கோர்ட்டுக்கு மனுச் செய்தார். பிரதம நீதிபதி ஆர்னல் வைட், நீதிபதி மன்ரோ ஆகியோர் வழக்கை விசாரித்தனர். அரசாங்கத்தார் தரப்பில் பாரிஸ்டர் ரிச்மண்ட் ஆஜரானர். சிதம்பரனருக்கு அளிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்கக்கூடாது என வாதாடினர். 1908-ஆம் வருடம் நவம்பர் 4-ஆம் தேதி தீர்ப்புக் கூறினர். அரச நிபந்தனைக்காக விதிக்கப்பட்ட 20 வருடத் தண்டனையை நான்கு வருடமாகக் குறைத்தனர். அது போன்றே சிவாவுடன் உடந்தையாக இருந்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட 20 வருடத் தண்டனை 6 வருடமாகக் குறைக்கப் பட்டது. சிதம்பரனரின் நண்பர்கள் பெருமுயற்சி செய்து பிரிவி கௌன்சிலுக்கு அப்பீல் செய்தனர். அங்கு அந்தமான் சிறைவாசத் தண்டனை ஆறுவருடக் கடுங்காவல் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.



# 10. செக்கிழுத்தார் செம்மல்

சிதம்பரனார் கோயம்புத்தூர், கண்ணனூர் ஆகிய சிறைகளில் தமது தண்டனைக் காலத்தைக் கழித்தார். அப்போது சிறைகளில் அதிகத் தேசபக்தர்கள் கிடையாது. அவர் தன்னந்தனியே காலத்தைக் கழித்தார். சிறைச்சாலைகளில் அப்போது எந்த விதமான வசதிகளும் இல்லை. சிதம்பரனார் சிறைச்சாலையில் மிகத் துன்பமடைந்தார். கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்களை விடச் சிதம்பரனாரைக் கேவலமாக நடத்தினர். அறுசுவை உணவு உண்டு வாழ்ந்த சிதம்பரனார் சிறையில் கேழ்வரகுக் கூழ் உண்டார். சிறை உணவு மிகவும் கேவலமானதாய் இருந்தது. சத்தற்ற உணவின் காரணமாய் அவர் உடல் மெலியலாயிற்று. ஆறே மாதங்களில் அவரது எடை 27 பவுண்டுகள் குறைந்து விட்டன. சிறை டாக்டர் எச்சரித்த பின்னரே சிதம்பரனாருக்கு அரிசி உணவு கொடுக்கப்பட்டது. சிறையில் அவருக்குக் கால்களில் பெரு விலங்கு போடப்பட்டது. மெல்லிய ஆடை அணிந்தவர் முரட்டுத்துணியாலான சட்டை அணிய வேண்டியதாயிற்று. தலையிலிருந்த மயிர் எடுக்கப்பட்டது. விடுதலை நாளைக் குறிக்கும் கட்டைத் தாலி கழுத்தில்.

உடல் நலம் குன்றியிருந்த போதும் சிறையதிகாரிகள் கடுமையான வேலை செய்யும்படி கட்டளையிட்டனர். சிதம்பரனார் மாடாகவே செக்கிழுத்தார். ஒரு நாள் களைப்புத் தாங்காமல் வெயிலில் மயக்கமடைந்து விழ்ந்துவிட்டாராம். அவர் செக்கிழுத்து வலம் வருவதாக நினைக்கவில்லை. சுதந்திர அன்னையின் திருக்கோயிலைச் சுற்றுவதாகவே அவர் எண்ணினார்.

சிறையில் பட்ட துன்பங்கள் போதாவென்று வெளியிருந்தும் துன்பங்கள் தொடர்ந்தன. சிதம்பரனார் சிறை புகுந்ததும் சுதேசிக் கப்பல் கம்பெனி முறிந்துவிட்டது. பிரிட்டிஷ் கம்பெனியின்

போட்டியைச் சமாளிக்க சுதேசிக்கம்பெனி நிர்வாகிகளால் முடியவில்லை. சிதம்பரனருக்கு அளிக்கப்பட்ட கொடுந்தண்டனை யால் அவர்களுக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது. கம்பெனியைக் கலைத்தனர். அத்துடன் நில்லாமல் கப்பல்கள் இரண்டையும் விற்றுவிட்டனர். சிதம்பரனர் கண்களிரண்டையும் இழந்தவர் போலானர். சிதம்பரனர் வடநாடு சென்று கஷ்டப்பட்டு வாங்கி வந்த 'காலியா' கப்பலை வெள்ளையரிடமே விற்றுவிட்டனர். இதைக் கேள்விப்பட்ட சிதம்பரனர் பல நாட்கள் ஊன் உறக்கமின்றி இருந்தார். கம்பெனியைக் கலைத்ததையும் அவரால் ஏற்றுக் கொள்ள முடிந்தது. எந்த வெள்ளையர் கம்பெனியை ஒழிக்க அவர் மிகப் பாடுபட்டாரோ அதே கம்பெனியிடம் கப்பலை விற்ற செய்தியைத்தான் அவரால் பொறுக்க முடியவில்லை. சோதனைக் காலத்தில் தம் நாட்டுமக்கள் கோழைகளாகிவிடுவது கண்டு வருந்தினர்.

அவருக்கு வந்த துன்பங்கள் இத்துடன் நின்றுவிடவில்லை. கம்பெனியின் முடிவிற்குச் சிதம்பரனரின் அரசியல் கொள்கை காரணம் என்றனர் நிர்வாகிகள். இழந்த பொருட்களுக்குச் சிதம்பரனர் நஷ்டஈடு தரவேண்டுமென்று கேட்டனர். இதை அறிந்த சிதம்பரனர் மிகவும் நொந்தார். கம்பெனியின் சட்ட ஆலோசகரான திரு. சி. விஜயராகவாச்சாரியாருக்குக் கடிதம் எழுதினர். "கம்பெனிக்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் பங்குதாரர்கள் ஏற்பதே நியாயம். அவர்கள் மறுத்தால் நானே கடன்களைக் கொடுத்துவிடுகிறேன்" என்று எழுதினர். இத்தனை துன்பங்கள் நேர்ந்த போதும் சிதம்பரனர் சோர்ந்துவிடவில்லை.

சிறையில் ஒவ்வொரு நாளும் அதிகாரிகளுடன் போராட வேண்டியிருந்தது. ஒரு நாள் ஜெயிலர் சிறையை மேற்பார்வை யிட்டுக்கொண்டே வந்தார். அப்போது சிதம்பரனர் யாது காரணத்தாலோ சிரித்தார். அது கண்ட ஜெயிலர் 'ஏன் சிரிக்கி ருய் ?' என்று கேட்டார். 'சிரிக்காமல் அழுவதா ?' என்று இவர் திரும்பக் கேட்டார். கோபம் கொண்ட ஜெயிலர் சூப்ரெண்டெண் டிடம் புகார் செய்தார். அதற்காக மேலும் இரண்டுவார தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றொரு நாள் சிதம்பரனரைத் தோட்டிவேலை செய்யுமாறு வற்புறுத்தினர். உயிர் போனலும் தோட்டிவேலை செய்ய மாட்

டேன் எனக் கூறி வேலை செய்ய மறுத்துவிட்டார். அவரது மன உறுதியை அறிந்த அதிகாரிகள் மேலும் வற்புறுத்தவில்லை. ராமன் என்ற கான்விக்ட் வார்டர் சிதம்பரனாரைக் கைகூப்பி வணங்குவதைக் கண்டான் ஒரு ஜெயிலர். இனிமேல் சிதம்பரனாரை வணங்கினால் செருப்பாலடிப்பேன் என்றான் அவன்.

திருநெல்வேலியில் தண்டிக்கப்பட்ட பலர் அப்போது கோயம்புத்தூர் சிறையில் இருந்தனர். சிதம்பரனாருக்குத் தண்டனை அளிக்கப்பட்ட செய்தி அவர்களுக்குத் தெரிந்தது. ராமனை ஜெயிலர் திட்டியதையும் அவர்கள் அறிந்தனர். அவர்கள் எல்லோரும் மற்றொரு வார்டில் இருந்தனர். சிதம்பரனாருக்குற்ற துன்பம் கேட்டுச் சீற்றம் கொண்டனர். எல்லோரும் சேர்ந்து ஜெயிலரைக் கொல்லத் திட்டமிட்டனர். ஒரு நாள் திடீரென்று ஜெயிலரின் அலுவலகம் தாக்கப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினம். பல காவலாளிகள் விடுமுறையிலிருந்தனர். சிறைச்சாலை இரண்டு மணிநேரம் அமர்க்களமாயிற்று. அபாய அறிவிப்பு மணி இடைவிடாது அலறியது. பூட்டை உடைத்துக் கொண்டு வெளியே கைதிகள் ஓட முயன்றனர். அந்தச் சமயம் ஏராளமான ரிசர்வ் போலீஸ்காரர்கள் வந்துவிட்டனர். அவர்கள் சுட்டதில் ஒரு கைதி மாண்டார். ஆனால் ஜெயிலர் பலமாகத் தாக்கப்பட்டார். அவர் உடல் நலம் பெறப் பல மாதங்கள் ஆயின.

இந்தக் கலகத்திற்குக் காரணமாயிருந்ததாய்ப் பல கைதிகள் மீது வழக்கு போடப்பட்டது. சிதம்பரனார் கைதிகள் தரப்பில் சாட்சி கூறினார். ஜெயிலரின் கொடுமையே கலகத்திற்குக் காரணம் என்று அவர் கூறினார். இதற்குப் பிறகு சிதம்பரனார் கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

# 11. புரட்சித் தீ

சிதம்பரனார் சிறை சென்ற பிறகும் புரட்சி அடங்கவில்லை. அறவழியில் நடந்த சுதேசிக் கிளர்ச்சி ஆயுதப் புரட்சியாக மாறியது. சர்க்கார் அடக்குமுறை யாருக்குமே பிடிக்கவில்லை. சிதம்பரனாருக்கு அளிக்கப்பட்ட கொடுந்தண்டனையையும், திருநெல்வேலியில் போலீஸார் செய்த வன்முறையையும் அவர்கள் மறக்கவில்லை. அறவழி வெற்றி தராது, ஆயுதமே வெற்றி தரும் என்று சிலர் தவறாகக் கருதினர். ஆயுதப் புரட்சியைச் சிதம்பரனார் அந்நிலையில் ஆதரிக்கவில்லை. அது இந்தியாவிற்குப் பொருந்தாது என்பது அவர் கருத்து.

இந்த ஆயுதப் புரட்சியை வடஇந்தியர் முன்னமேயே ஆரம்பித்துவிட்டனர். கிங்ஸ்போர்டு என்ற நீதிபதியைக் கொல்லும் முயற்சியில் தவறுதலாகக் கென்னடி என்ற ஆங்கில மாதையும், அவரது மகளையும் குண்டுவீசிக் கொன்றுவிட்டனர். இது 1905-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி பீகாரைச் சேர்ந்த முஜபர்பூரில் நடந்தது. இந்தக் கொலைக்குக் காரணம் என்று கருதப்பட்ட குதிராம் போஸ் என்ற இளைஞன் தூக்கிவிடப் பட்டான்.

வீரத்தின் விளைநிலமான பாண்டிநாட்டில் வீர இளைஞர்கள் ஒன்றுகூடி "அபிநவ பாரத சங்கம்" என்ற ரகசியச் சங்கம் அமைத்தனர். இந்தியாவின் விடுதலைக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்யச் சபதமும் செய்தனர். பத்திரத்தில் இரத்தக் கையொப்பம் இட்டனர். அவர்களிடம் 'பரங்கி ஒழிப்பு அச்சகம்' என்ற அச்சகமும் இருந்தது. இரகசியப் பிரசுரங்கள் அச்சடித்து வினியோகித்தனர். இதைக் கண்ட அரசினர் தேசபக்த இளைஞர்களைத் தண்டிக்கத் தொடங்கியது. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கடுந்தண்டனை அடைந்தனர். பல புரட்சிக்காரர்கள் புதுவையில் தஞ்சம் புகுந்தனர்.

புதுவையிலிருந்த புரட்சிக்காரர்கள் லண்டன், பாரீஸ் ஆகிய இடங்களில் இருந்த இந்தியப் புரட்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். விநாயக தாமோதர சவர்க்கார் இந்தப் புரட்சிக்காரர்களின் தலைவராக இருந்தார். லண்டனில் 'இந்தியா மாளிகை' புரட்சிக்காரர்களின் பாசறையாக இருந்தது.

புதுவையிலிருந்த புரட்சியாளர்கள் பாரீஸ் வழியாக 'இந்தியா மாளிகை'யை அடைந்தனர். தென்னிந்தியப் புரட்சிக்கு 1910-ஆம் ஆண்டிற்குள் திட்டம் உருவாகியது. லண்டனிலிருந்த வ. வே. சு. ஐயர், சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஆகியோர் பாரீஸ் வழியாகப் புதுச்சேரிக்கு வந்தனர்.

இந்தப் புரட்சிகளுக்கான ஏற்பாடு நடந்த சமயத்தில் திருநெல்வேலி கலெக்டராக ஆஷ் என்பவர் இருந்தார். அவர் சப்-கலெக்டராக இருந்தபோது செய்த கொடுமைகளுக்காகப் பழிவாங்கத் திட்டமிடப்பட்டது. 1911-ஆம் வருடம் ஜூலை மாதம் 17-ஆம் தேதி ஆஷ் ரயிலில் கோடைக்கானலுக்குச் சென்றுகொண்டிருந்தார். அவருடன் பிரயாணம் செய்த வாஞ்சி நாதன் என்ற இளைஞர் மணியாச்சி ஸ்டேஷனில் அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டார். உடனே வாஞ்சிநாதன் தன் வாயில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக்கொண்டார். தலை சுக்கல் சுக்கலாக உடைந்துவிட்டது. தம்மை ஆங்கிலேயர்கள் அடையாளம் கண்டுகொள்ளக்கூடாது என்று அவர் விரும்பினர். ஆங்கிலேயர்கள் அவரை யாரென்று அடையாளம் கண்டு கொண்டால் தம் நண்பர்களுக்குத் தொல்லைகள் ஏற்படும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் ஒரு வழிப்போக்கர் அடையாளம் கண்டு பிடித்துவிட்டார். செங்கோட்டையைச் சேர்ந்தவர் அவர். அவர் தந்தையின் பெயர் ரகுபதி ஐயர். அவர் காட்டிலாகா அதிகாரி என்று அவர் கூறிவிட்டார். வாஞ்சிநாதன் சட்டைப்பையில் பல கடிதங்கள் இருந்தன. சிதம்பரனர் கடுந்தண்டனை பெறக் காரணமாயிருந்தவர் ஆஷ்துரைதான். ஆகையால், அவரைச் சுட்டுவிட்டேன் என ஒரு கடிதத்தில் எழுதியிருந்தார். தொடர்ந்து நடைபெறவேண்டிய புரட்சியைப் பற்றிய கடிதங்களும் இருந்தன.

கலெக்டர் ஆஷ் கொல்லப்பட்ட செய்தியைச் சிதம்பரனர் அறிந்தார். வீர இளைஞர்கள் தங்கள் வாழ்வைப் பலியிட்டுக்

கொள்வதை அவர் விரும்பவில்லை. பிற்காலத்தில் நாடாள வேண்டியவர்கள் வீணாக இறக்கின்றனரே என்று வருந்தினார்.

இந்தக் கொலை நடந்த பிறகு போலீஸார் தீவிரமாக விசாரிக்க ஆரம்பித்தனர். கல்கத்தாவில் பதினான்கு பேரைக் கைது செய்த னர். அதில் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த நீலகண்டபிரம்மச்சாரி ஒருவர். மற்றொருவர் தென்காசி டி. எஸ். சிதம்பரம் பிள்ளை. இரகசியச் சங்கங்கள் நிறுவி, பலாத்காரப் புரட்சி உண்டு பண்ணச் சதி செய்ததாகப் போலீஸார் குற்றம் சாட்டினர். வழக்கு செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டது. ஒன்பது பேர்கள் தண்டிக்கப்பட்டனர். ஐவர் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு நடந்த பலாத்காரப் புரட்சியைச் சிதம்பரனார் ஆதரிக்கவில்லை. ''நாம் ஆங்கிலேயரை நாட்டை விட்டு வெளியேற்றத்தான் போராடுகிறோம். அவர்களைக் கொலை செய்வது முறையல்ல. இந்தப் பலாத்காரத்தால் சுதந்திரம் கிடைக்காது. கிடைக்கும் என்று நினைப்பதும் தவறு'' என்று தம் நண்பர் ஒருவருக்கு எழுதினார்.

## 12. நட்பும் சுற்றமும் மறந்தன !

கோயம்புத்தூர், கண்ணனூர் ஆகிய சிறைகளில் தம் தண்டனைக் காலம் முழுவதையும் கழித்தார். 1912-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலையடைந்தார். விடுதலையடைந்த பிறகு பல ஆண்டுகளை சென்னையில் கழித்தார். சிறை மீண்ட பிறகு அவரை வரவேற்ற ஒரே நண்பர் சிவா. பல ஆண்டுகள் சிறைத் துன்பம் அனுபவித்தவர் சிதம்பரனுர். அவரைக் கண்டவுடன் ''அப்பா சிதம்பரம் வந்தாயா ?'' என அன்புடன் வரவேற்றார். சிதம்பரனுர் அடைந்த துன்பம் கண்டு மிக வருந்தியவர்கள் இருவர். ஒருவர் சிவா. மற்றொருவர் கவியரசர் பாரதியார்.

இராஜ நிந்தனைக் குற்றத்திற்காகத் தண்டனை அடைந்தவர் சிதம்பரனுர். இதனால் அவர் வக்கீல் 'சன்னத்து' பறிமுதலா யிற்று. அவர் தொழில் நடத்த முடியவில்லை. வருவாய்க்கு வேறு வழியில்லை. வறுமையை நீக்கு என்று உபதேசித்தவர் அவர். அவர் சிறையைக் கண்டு அஞ்சவில்லை. எல்லாவற்றை யும்விட வறுமையைக் கண்டு மட்டுமே நொந்தார். செக்கிழுத்து மெய்வருந்திய போது அவர் வாடவில்லை. வறுமையில் இந்தியா வில் அவர் பல லட்சக்கணக்கான குடும்பங்கள் வாடுவது கண்டு விம்மியவர் அவர்.

சிதம்பரனுர் சிறப்பாக வாழ்க்கை நடத்தியபோது தம்மை நாடி வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லியதில்லை. ஈகையும் இரக்கமும் மிக்கவர் இவர். தமது கைப்பொருளைத் தாராள குணத்துடன் அளிப்பார். ஒருசமயம் ஒருவர் சிதம்பரனுரை அணுகிப் பொருளுதவி வேண்டினர். ''குழந்தையின் மணத்திற்கு நாள் வைத்துவிட்டேன் ; பணமில்லை ; ஓராயிரம் ரூபாய் வேண்டும். எப்படியாவது கொடுத்து உதவுங்கள்'' என வேண்டினர். உடனே சிதம்பரனுர் தம்மிடமிருந்த பணம் ஓராயிரத்தைக் கொடுத்

துதவினர். தேசத்தின் பொருட்டு தமது கைப்பொருளை இழந்தார். வருவாயையும் இழந்தார்.

வக்கீல் சன்னத்தைத் திரும்பப் பெற முயன்றார் சிதம்பரனார். சிதம்பரனாருக்கு இ. எச். வாலஸ் என்ற நீதிபதி உதவினார். அவருடைய பெருமுயற்சியால் வக்கீல் சன்னத்து திரும்பக் கிடைத்தது. நன்றி மறவாச் சிதம்பரனார் தமது புதல்வன் ஒருவனுக்கு வாலீஸ்வரன் என்று பெயரிட்டார். அவ்வாறே சிதம்பரனாருக்கு அவ்வப்போது பொருளுதவி செய்த தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தம் மகனுக்கு வைத்தார். ஆறுமுகம் பிள்ளை, கப்பல் கம்பெனி வளர உதவியவர். ஊக்கம் அளித்தவர். தன்னமைற்றவர் சிதம்பரனார். பிறர் நலம் கருதியே உழைத்தார். வறுமையுற்றபோதும் அவர் பொதுநலப் பணியில் ஈடுபட்டார். பெரம்பூர் ரயில்வேத் தொழிலாளர்கள் சங்கத்தின் துணைத்தலைவராக இருந்தார். அவர்களது முன்னேற்றத்திற்காகப் பல ஆண்டுகள் உழைத்தார். 'சன்னத்து' திரும்பக் கிடைத்ததும் கோவில்பட்டிக்குத் திரும்பினார். அங்கு சிலகாலம் தொழில் நடத்தினார். பிறகு மறுபடியும் தூத்துக்குடிக்குத் திரும்பினார்.

## 13. மகாத்மாவுக்கு மறுப்பு

காந்தியடிகள் மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை எதிர்க்கத் திட்டமிட்டார். அவர் தமது திட்டங்களைத் தயாரித்தார். அதைத் தேசத்தினர் அனைவருக்கும் அறிவித்தார். அவருடைய திட்டம் பிரிட்டிஷாருடன் ஒத்துழையாமை. அதன்படி தேச மக்கள் சட்டசபை, கலாசாலை, நீதி மன்றம் ஆகியவற்றைப் பகிஷ்காரம் செய்வது. காந்தியடிகள் வேண்டுகோளுக்கிணங்கி ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்லூரி செல்வதை நிறுத்தினர். வக்கீல்கள் பலர் சட்டசபையையும், நீதிமன்றத்தையும் பகிஷ்கரித்தனர்.

காந்தியடிகளின் திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக 1920-இல் காங்கிரஸ் மகாசபை கூடியது. சிதம்பரம் பிள்ளையவர்களும் பிரதிநிதியாகக் கல்கத்தா சென்றிருந்தார். ஒத்துழையாமை இயக்கம் அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் அதை எதிர்த்தார். காந்தியடிகள் சென்ற பாதையைப் பின்பற்ற அவருக்கு மனமில்லை. அதில் நம்பிக்கையும் இல்லை. மகாத்மா காந்தியைப் பின் பின்பற்றுவதா அல்லது தன் மனம் சொல்லும் வழியைக் கடைப்பிடிப்பதா என்று அவர் யோசித்தார். தன் மனம் சொல்லும் வழியே செல்வது சரியென அவர் எண்ணினார். காங்கிரசை விட்டு விலகினார். பகைமை காரணமாக அவர் விலகவில்லை. காந்தியடிகளிடம் சிதம்பரனாருக்கு அளவுகடந்த மதிப்பு இருந்தது. காந்தியடிகளை அவர் 'உலகெலாம் புகழும் காந்தி மாமுனிவன்' என்று குறிப்பிட்டார். சிதம்பரனார் ஒழுக்கத்தில் சிறந்த உத்தமர். காந்தியடிகளின் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை அவரைக் கவர்ந்தது. திலகரைத் தன்னுடைய அன்னை, தந்தை, குரு, தெய்வமாகக் கொண்டவர் சிதம்பரனார். திலகரின் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது காந்தியின் கொள்கை. அவருக்குக் காந்தீயத்தின் மீதுதான் வெறுப்பு. அகிம்சையை

வெறுத்தார். ஒத்துழையாமை அவருக்குப் பிடிக்கவில்லை. காங்கிரஸ் மகாசபையிலிருந்து வெளியேறிய பின்னரும் அதன் வளர்ச்சிக்கு உதவி வந்தார். அந்நியக் கட்சி எதிலும் அவர் சேர வில்லை. நாட்டின் விடுதலை ஒன்றே அவர் நோக்கம்.

சிதம்பரனுர் தனது கொள்கைக்கு மறுப்பு தெரிவித்தபோதும் காந்தியடிகள் அவரை வெறுக்கவில்லை. சிதம்பரனுரின் களங்க மற்ற உள்ளத்தை நன்கறிந்தவர் காந்தியடிகள். அவர் செய்த தியாகங்களையும் காந்தியடிகள் அறிவார். காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்தபோதே சிதம்பரனுருக்கும் காந்தி படிகளுக்கும் கடிதத் தொடர்பு உண்டு. காந்தியடிகளின் திட்டத் திற்கு எதிர்ப்பு பலமாக இருந்தது. ஆயினும் அதிகப்படியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேறியது. உடன் சிதம்பரனுர் சென்னை திரும்பினுர். ஒத்துழையாமைத் திட்டத்தால் சுதந்திரப் போர் வெற்றி பெருது என அறிக்கை வெளியிட்டார். பின்னர் காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டார். அவர் ஒத்துழைத்தலும், ஒத்துழையாமையும் ஒரே சமயத்தில் நிகழவேண்டும் என்று விரும்பினுர். ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரிப்பவர்கள் செயலைக் கிழவர்களின் செயலுக்கு ஒப்பிட்டார். 'தின்பண்டத்தின் சிறு பகுதியை ஏற்காமல், முழுவதையும் வேண்டித் தாய் தந்தை யருடன் குழந்தைகள் கோபித்துக்கொள்ளும். இதைப் போன்றதே ஒத்துழையாமை' என்ருர்.

பின்னர் ஏழு வருடங்கள் கழித்து காங்கிரஸில் மறுபடியும் சேர்ந்தார். 1927-ஆம் ஆண்டு சேலத்தில் மூன்ருவது அரசியல் மாநாடு நடைபெற்றது. அதில் தலைமையுரை ஆற்றினுர். "ஒத்துழையாமை இயக்கம் எனது கொள்கைக்கு மாறுபட்டது. அந்த இயக்கம் இப்போது முடிந்துவிட்டது. அரசியல் வாழ்வி லிருந்து விலகியிருந்தேன். மறுபடியும் அரசியற் பணியைத் தொடர நினைத்தேன். நண்பர்களும் என்னை அழைத்தனர். அக்கட்டளை எனக்குக் காலத்தில் நீங்கள் செய்த உதவி. தேசாபி மான ஒளி நாளுக்கு நாள் வளருமே தவிரக் குறையாது," என்று அவர் கூறினுர். பின்னர் அவர் காங்கிரஸ் மகாசபையுடன் தொடர்பு கொள்ளாமலே இருந்துவிட்டார்.

அவர் இறுதிநாள் வரை ஆங்கில ஆட்சியை எதிர்த்து வந்தார். தம் பாதையிலிருந்து விலகவே இல்லை. அப்போது

தென்னிந்தியாவின் ஆளுங்கட்சியாக இருந்தது ஜஸ்டிஸ் கட்சி. அந்த வகுப்புவாதக் கட்சியை அவர் விரும்பவில்லை. ஜஸ்டிஸ் கட்சியினர் சிதம்பரனாரைத் தங்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ள விரும்பினர். சிதம்பரனார் பிராமணரல்லாதவர்கள் வாழ்வின் பல துறைகளில் பின் தங்கியது கண்டு வருந்தியவர். ஆனால் அதன் காரணமாய் அரசியல் கட்சி உருவாகியதை அவர் விரும்பவில்லை. ஜஸ்டிஸ் கட்சியில் சேர மறுத்துவிட்டார்.

தனது அரசியல் அஞ்ஞாதவாச காலத்தில் அவர் தாய் மொழிக்குத் தொண்டாற்றினர். அவர் அரசியலில் மட்டுமே சிறந்தவர் அல்லர். அவரது உடன்பிறப்பு பேச்சுக்கலை. சங்க இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். அவர் சொற்சுவையுடனும், பொருட்சுவையுடனும் கூடிய பாக்கள் பலவற்றை இயற்றியுள்ளார். அவர எழுதிய கடிதங்கள் கவிதை வடிவமாகவே உள்ளன. அவர் தமது சிறை வாழ்வு குறித்து எழுதியவை உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தவை. ஆங்கிலமும், தமிழும் நன்கறிந்த அவர் மொழி பெயர்த்தவை ஜேம்ஸ் ஆலனின் ஆங்கில நூல்கள். திருக்குறள் அறத்துப்பாலை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த் தார். சித்த வைத்தியமே நம் நாட்டு சீதோஷ்ண நிலைக்குச் சிறந்தது என்பது அவர் கூற்று. அவர் 'மெய்யறிவு', 'மெய்யறம்' என்ற நீதி போதனை நூல்கள் எழுதினர். அவை பண்டைக்கால நீதி நூல்களுக்கு நிகரானவை.

1935-ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவர் பாபுராஜேந்திரப் பிரசாத் தூத்துக்குடி வந்திருந்தார். அப்போது சிதம்பரனார் நோய் வாய்ப்பட்டிருந்தார். இதை அறிந்ததும் பாபுராஜேந்திரப்பிரசாத் சிதம்பரனார் இல்லத்திற்கு நேரே சென்றார். அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் ''சிதம்பரனார் வாழும் தூத்துக்குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் சிறை சென்றது கண்டு வருந்தியவன் நான். எனது தேசாபிமானம் மேலும் அதிகமாக அதுவும் ஒரு காரணமாயிற்று'' என்றார். வீரச்செம்மல் சிதம்பரனாரை வடநாட்டாரே அதிகம் புரிந்துகொண்டிருந்தனர். தென்னாட்டார் அவரைச் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை.

விடுதலைப் போரினால் சிதம்பரனார் அடைந்தவை இரண்டு ; ஒன்று வறுமை ; மற்றொன்று பிணி. 1936-ஆம் வருடம் சிதம்பரனார் நோய்வாய்ப்பட்டார். ஒரு மாதத்திற்கு மேலாகவே

படுக்கையில் இருந்தார். இந்தியத் தாயின் அடிமைப் பிணி அகற்றப் பாடுபட்டார். தம் பிணி தீர்க்கும் வகை தெரியாமல் வருந்தினர். அவர் இறப்பதற்குச் சில நாட்கள் முன்பு தூத்துக்குடி மாசிலாமணிப் பிள்ளை சிதம்பரனரைக் காணச் சென்ருர். உடல் நலம் குன்றியிருந்தபோதும் ஏழைகளின் இன்னல் பற்றியே வருந்தினர். அது பற்றியே தம்மைக் காண வந்த நண்பரிடமும் கூறி அழுதார். ஏழைகள் இன்புறும் நாளையே நன்னளாக எண்ணினர்.

உயிர்விடும் தருவாயில் தேவாரத்தையும் திருவாசகத்தையும் பாடச்சொல்லிக் கேட்பர் சைவர்கள். வைணவர்கள் பிரபந்தம் கேட்க விரும்புவர். திருக்குறளையே வேதமாகக் கொண்ட சிதம்பரனர் பாரதியார் பாடல்களைக் கேட்க விரும்பினர். ''என்று தணியுமெங்கள் சுதந்தர தாகம்'' என்ற கவிதையை அவர் மிக விரும்பிக் கேட்டார். அவர் அப்போதே ''உலகயுத்தம் வருவதற்கு அதிக காலம் ஆகாது. அதன் மூலம் இந்தியா சுதந்திரம் அடையும் என்பது திண்ணம்'' என்ருர். இது அவருடைய ஆழ்ந்த அரசியல் அறிவையே காட்டுகிறது.

அரசியலாக் இன்னலையே அடைந்த அவருக்கு இறுதி நாட்கள் வந்துவிட்டன. மருத்துவர்கள் கைவிட்டனர். அப்போது கண்களில் நீர் வழிய ''சாவதற்கு முன்னர் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லையே!'' என்று கூறினர். கவியரசர் பாரதியாரின் தேசீயப் பாடல்களைப் பாடச்சொன்னர். கேட்டு மனம் பூரித்தார். அந்த உள்ளப் பூரிப்புடனே நவம்பர் 18-ஆம் தேதி நள்ளிரவில் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார். கன்னித் தமிழ் வளர்த்த கவிஞர் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்ருர். அவர் இறப்பதற்கு முன்னர் தன் அருகில் இருந்த தேசபக்தர்களை வணங்கி விடைபெற்ருர்.

தமிழ் நாட்டின் தனிப் பெருந்தலைவர் செம்மல் சிதம்பரனர் இறந்த செய்தி திருநெல்வேலி, தூத்துக்குடியெங்கும் பரவியது. சிதம்பரனர் சிறைப்பட்ட செய்திகேட்டதும் புரட்சி செய்தவர்கள் திருநெல்வேலி மக்கள். தங்கள் வீரத் தலைவர் இறந்த செய்தி கேட்டுப் புலம்பினர். சிதம்பரனரிடம் அன்புகொண்ட மக்கள் அவர் இல்லத்தை அடைந்தனர். அந்த மறத்தமிழருக்குக் கடைசி வணக்கத்தைத் தெரிவித்தனர். சுற்றத்தார்களும், நண்பர்களும், மனைவி மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

## 14. கனவிலும் நாடு, நினைவிலும் நாடு

சிதம்பரனார் தமது இறுதிக் காலத்தில் அரசியலிலிருந்து விலகியிருந்தார். அது காரணமாக மக்கள் அவரை மறந்தனர். அவர் மறைந்து மூன்று ஆண்டுகள் வரை அவர் நினைவு நாளைக் கொண்டாடக்கூட மறந்தனர். 'நன்றி மறப்பது நன்றன்று' என்பதை அறிந்தவர்கள் தமிழர்கள். 1939-ஆம் ஆண்டு சென்னையில் ராயப்பேட்டைக் காங்கிரஸ் மண்டபத்தில் சிதம்பரனாரின் உருவச்சிலை அமைத்தனர். திரு. சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். திரு.டி.எஸ்.எஸ். ராஜன் சிலையைத் திறந்து வைத்துப் பேசினார். அப்போது அவர், "சிதம்பரனார் தூய தமிழர். அவர் என்னுடைய முதல் அரசியல் குரு என்று பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன்," என்றார். விழாவிற்குச் சிதம்பரனாரின் நண்பரும், சுதேசிக் கம்பெனி சட்ட ஆலோசகராகவும் இருந்த சேலம் சி. விஜயராகவாச்சாரி செய்தி அனுப்பியிருந்தார். அதில், "சிதம்பரம் பிள்ளை மாசு மறுவற்ற தேசபக்தர். கள்ள மற்ற நெஞ்சுடையார். தமிழ் நாட்டார் சிலை எடுத்துப் போற்றுவதற்குத் தகுதியுடைய வீரராவார்." சிதம்பரனாரின் அரசியல் நண்பர்கள் அனைவரும் விழாவிற்கு வந்திருந்தனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் 'ஜலப்பிரபா' என்ற கப்பல் கடலில் மிதக்கவிடப்பட்டபோது சர்தார் வல்லபாய்ப்பட்டேல் சிதம்பரனாரின் வீரத்தைப் போற்றிப் புகழ்ந்து பேசினார். தென் பாண்டி வணிகர்கள் தூத்துக்குடிக்கும், சிங்களத்திற்கும் இடையே செல்லப் போக்குவரத்திற்கு ஒரு கப்பல் வாங்கினர். அந்த முதற் கப்பலுக்கு 'வி. ஓ. சிதம்பரம்' எனப் பெயரிட்டனர். தென் பாண்டி வணிகர்கள் தம் மறத்தமிழரை, வீரரை மறக்கவில்லை. அக்கப்பலை மிதக்கவிட்டபோது கவர்னர் ஜெனரல் ராஜாஜி "வீரர் வ. உ. சி. வாழ்க !" எனக் கோஷமிட்டார். ஐம்பதாயிரம்

மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு இடையே ராஜாஜி அதை மிதக்கவிட்டார். ராஜாஜி சிதம்பரனாரின் புகழை வாயாரப் பேசினார்.

சிதம்பரனார் ஆரம்பித்த விடுதலைப் போர் வெற்றி பெற்றது. அவர் கனவும், கவியரசர் பாரதியார் கனவும் நனவாயின. வெள்ளையர்கள் வெளியேறினர். சிதம்பரனார் விரும்பிய மக்களாட்சி வந்துவிட்டது. ஆனால் இந்தியத் தாய் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றதைக் காண, சிதம்பரனார் இல்லை. அவர் உடல் மறைந்துவிட்டது. ஆயினும் தமிழினம் உள்ள வரை அவர் புகழ் அழியாது.

## 15. தமிழ்த்தொண்டு

சிதம்பரனுர் சிறந்த தேசபக்தர் ; அடிமைப்பட்டுக் கிடந்த தாய்நாட்டின் விடுதலைக்காகத் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈடுபடுத்தியவர் என்பதை நாம் அறிவோம். தேச பக்தியின் ஒரு கூருகவே, அவருடைய தாய்மொழிப் பற்றும் விளங்கியது. எவ்வளவோ இன்னல்களுக்கு இடையிலும் அவர் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார்.

சிதம்பரனுர் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவராகத் திகழ்ந்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களைச் செவ்வையாகக் கற்றுத் தேர்ந்தவர். அதே நேரத்தில், தாய்மொழிப் பாசம் வெறும் மொழி வெறியாக மாறிவிடவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும் ; அவர் பல மொழிகளிலும் புலமை உடையவர். ஆங்கிலத்தை மிகவும் நயமாய்க் கையாள வல்லவர் ; வடமொழியில் தேர்ந்தவர் ; மலையாளம் நன்ருகத் தெரியும் ; மலையாளப் புத்தகம் ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தெலுங்கு மொழியிலும் பயிற்சி உள்ளவர்.

சிதம்பரனுர் பாலகங்காதர திலகரைத் தம் குருநாதராக வழிபட்டவர். திலகர் பன்மொழிப்புலவர் ; அவருடைய கீதை ஆராய்ச்சி நூல் இன்றும் போற்றப்படுகிறது ; அவருடைய பல ஆங்கில நூல்கள் இந்நாட்டில் மட்டும் அல்ல, மேலை நாடுகளிலும் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளன. சிதம்பரனுர் தம் ஆசானைப் போலவே புலமை மிக்கவர். நாட்டுத் தொண்டு என்பதற்குள் மொழித் தொண்டு என்பதும் அடங்கும் என்பதை உணர்ந்தவர்.

இன்று அரசியல் என்பது ஒரு தொழில் போலவே ஆகிவிட்டது. வலுவாகப் பேசத் தெரிந்தவர்கள் மிக எளிதாகத் தலைவர்கள் ஆகிவிடுவதைக் காண்கிறேம். ஆனுல், அக்காலத்

தில், அரசியல் நல்ல தொழில் என்று அதை யாரும் மேற்கொள்ள வில்லை. நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற பரந்த உள்ளம் படைத்தவர்கள் அரசியலில் பங்கு பற்றினர்கள் ; கல்வி யால் தெளிந்த மதி வாய்ந்தவர்களுக்கு அன்று நல்ல மதிப்பும் செல்வாக்கும் இருந்தன. அல்லல்களையும், இன்னல்களையும் ஏற்கவல்ல வலிய மனம் படைத்தவர்கள் தேச சேவையில் ஈடு பட்டார்கள். சிதம்பரனர் அந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர். அவருடைய அரசியல் தொண்டு பற்றிச் சுருக்கமாக அறிந்து கொண்டோம் ; அவர் தமிழ்மொழிக்கு ஆற்றிய சேவையை இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

வ.உ.சி. ஒரு நூலாசிரியர் ; உரை ஆசிரியர் ; பதிப்பாசிரியர் ; மொழி பெயர்ப்பு ஆசிரியர் ; தத்துவஞான போதகர்.

நூலாசிரியர் : சிதம்பரனர் உடைநடை, செய்யுள் நூல்கள் பல இயற்றியுள்ளார். மெய்யறம், மெய்யறிவு, வலிமைக்கு மார்க்கம், சாந்திக்கு மார்க்கம், வள்ளியம்மை சரித்திரம்—என்பன அவர் ஆக்கிய நூல்களின் பெயராம். மனிதசாதி, உயர்வு பெறுவ தற்கான வழி வகைகளை அவர் இந்த நூல்களில் தொகுத்துத் தருகிறார்.

சிதம்பரனர் கண்ணனூர்ச் சிறையில் இருந்தார் ; அவரோ டிருந்த மற்றத் தேச பக்தர்கள் அவருடைய புலமையைக் கண்டு வியப்புற்றார்கள் ; மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நன்மைகளைப் பற்றியும், அகற்றவேண்டிய தீமைகளைப் பற்றியும் பாடும்படி அவர்கள் அவரை வேண்டிக்கொண்டார்கள். சிறையில் இருந்த போது அவர் இப்பொருளைப் பற்றிப் பத்து வெண்பாக்கள் பாடினர். பின்னர், அவற்றை விரிவாக நூறு வெண்பாக்களாக் கினர். இந்த நூலே 'மெய்யறிவு' எனப்படும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் வகுத்த நெறிப்படி வாழ்ந்தவர் சிதம்பரனர். திருக்குறள் எல்லாக் காலங்களுக்கும், எல்லா நாடு களுக்கும் ஏற்ற அறநூல் அல்லவா ? திருக்குறளை மிகத் தெளிவாகக் கற்றுணர்ந்த சிதம்பரனர் அது போதிக்கும் அறத் தை வடித்துக் கொடுத்த நூல் 'மெய்யறம்' என்ற பெயரில் வெளி வந்துள்ளது. திருக்குறள் பழமையான நூல் ; இக்காலத்துச் சமூக அமைப்பில் திருக்குறளின் அறநெறிகளை எப்படிப் பயன்

படுத்திக்கொள்ள முடியும் என்பதை இந்நூல் விளக்குகிறது. 'வள்ளுவர் மறையின் வழிநூல் மெய்யறம்—' என்று சிதம்பரனாரே இந்த நூலின் பாயிரத்தில் உரைக்கிறார்.

'மெய்யறம்' என்ற இந்தப் புத்தகத்தில், திருக்குறளில் கூறப் படாத பல புதிய அறங்கள் கூறப்படுகின்றன ; இவை காலத்தின் தேவையால் தோன்றிய அறங்கள். 'துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்' என்று அவர் கைம்பெண் மணத்தை ஆதரிக்கிறார்.

ஆணுக்குப் பெண் இளைத்தவள் இல்லை என்பதை இந்நூல் அழுத்தமாக வற்புறுத்துகிறது. பெண்கள் பரபுருடனை நாடக் கூடாது என்பது நம் பண்பாட்டின் அடிப்படை விதியாகப் பேசப் படுகிறது ; ஆண்கள் பரஸ்திரீயை நாடுவது பெரும் பாதகம் என்று சிதம்பரனார் இந்நூலில் உரைக்கிறார்.

'ஆண்பால் உயர்வெனல் வீண் பேச்சறிக !'

'தன் துணை அலைவுத் தழுவுவோன் பரத்தன்.'

'பரத்தையினும் மிகக் கொடியவன் பரத்தன்'

'நன்மகன் கெடுதல் அப் புன்மகனாலே'

'மறவெல்லாம் நிகழ்வது அம் மாபாவியாலே !'—இத்தகைய கருத்து முத்துக்களை 'மெய்யறம்' என்ற நூலில் ஏராளமாய்க் காணலாம். ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் இருப்பதை அவர் மனமார வெறுத்ததையும், அவருடைய சீர் திருத்த மனப்பான்மையையும் இந்தக் கருத்துக்கள் தெளிவாக்க வில்லையா ?

நம் சமயத்துப் பழக்க வழக்கங்களில் புகுந்துவிட்ட பல மாசு களையும் அவர் மிகவும் கடுமையாகச் சாட்டுகிறார், இந்த நூலில்.

'சாமிகளுட் பலர் காமிகளாயினர்'

'தேசிகருட் பலர் ஆசினராயினர்'

தம்பிரான் மறவெல்லாம் எம்பிரான் அறிவர்'

'போலி அந்தணர் பலர் புரியா மறம் இல்லை'—என்பன போன்ற கருத்துக்கள் சிதம்பரனாரின் புரட்சி மனப்பான்மையைக் காட்டு கின்றன.

**உரை ஆசிரியர் :** தமிழ் மறையாம் திருக்குறளுக்குப் பல பேரறிஞர்கள் உரை எழுதியுள்ளனர். அவர்களினும் தலையாயின

வராகக் கருதப் பெறுகிறவர் பரிமேலழகர் ; அவருடைய உரை மிகச் சிறந்ததால் இன்றும் போற்றப்படுகிறது.

ஆனால், பரிமேலழகர் திருக்குறள்கள் பலவற்றுக்கு நேர் பொருள் கொள்ளவில்லை என்றும், வள்ளுவரின் கருத்துகளுக்கு மாறுபட்ட உரைகளைக் காண்கிறார் என்றும் சிதம்பரனார் கருதினார் ; ஆகையால், பரிமேலழகரின் உரை ஏற்கத் தக்கதல்ல என்று தீர்மானித்தார். மணக்குடவர் என்ற மற்றோர் உரையாசிரியரை அவர் பாராட்டினார். மணக்குடவரே வள்ளுவத்தை உணர்ந்து நேர்பொருள் கூறியவர் என்று போற்றினார் ; திருக்குறளுக்கு மணக்குடவர் எழுதிய உரையைத் திருத்தமாக வெளியிட்டார்.

அவர் அத்துடன் அமையவில்லை. திருக்குறள் அறிஞர்கள் மட்டும் போற்றுவதற்கென்று தோன்றிய நூல் அல்ல ; எல்லாத் தரத்தினரும் பின்பற்ற வேண்டிய அறநெறிகளை விண்டு கூறும் அறநூல் ; ஆகையால், எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு விளக்க உரை இயற்றினார்.

தமிழ்மொழியின் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ; அதனை மிக நுணுக்கமாய்க் கற்றார் சிதம்பரனார். தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரை மிக எளிதாக இருந்ததால் அதனைப் பல சுவடிகளோடு ஒப்பு நோக்கி வெளியிட்டார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்றோர் இப்பணியில் அவருக்கு உதவி புரிந்தனர்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தையும் அவ்வாறே திருத்தமான பதிப்பாக வெளியிட்டார். தொல்காப்பியத்தில் எஞ்சிய பகுதிகளையும் வெளியிட அவர் மிகவும் விரும்பினார் ; என்றாலும், பல இடையூறுகளால் அவரால் அதனைச் செய்ய இயலவில்லை. இப்பொறுப்பை ஏற்கும்படி பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையைத் தூண்டினார் ; அவரே பல சுவடிகளைத் தேடிக்கொடுத் தார். சிதம்பரனார், வையாபுரிப்பிள்ளை ஆகிய இருவரின் பெயரால் அப்பதிப்பு வெளியாயிற்று.

'நன்னிலை' என்ற நூலுக்கும் சிதம்பரனார் மிக எளிய முறையில் உரை எழுதியுள்ளார்.

சிதம்பரனார் சைவ சித்தாந்தத்தில் மிகவும் ஈடுபாடு கொண்ட வர். 'சிவஞானபோதம்' என்ற நூல் சைவசித்தாந்திகளின் மூல

நூலாம். சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த ஞானமும் அனுபவமும் உடையவர்களே இந்த நூலுக்கு உரை எழுத இயலும். சிதம்பரனார் இந்த நூலுக்கு மிகவும் நயமான உரை ஒன்று எழுதியிருக்கிறார்.

மொழிபெயர்ப்பு ஆசிரியர் : ஜேம்ஸ் ஆலன் என்பார் ஆங்கிலப் பேராசிரியர் ; அவருடைய நூல்கள் சிதம்பரனாரை மிகவும் கவர்ந்தன. ஆலனுடைய இரண்டு நூல்களை அவர் 'மனம் போல் வாழ்வு', 'அகமே புறம்' என்ற தலைப்புக்களில் தமிழாக்கம் செய்துள்ளார். மொழிபெயர்ப்பு என்பதே விளங்காத வண்ணம் அப்புத்தகங்கள் விளங்குகின்றன. அந்த நூல்களுக்கு இடையில் குறள் பாக்களைச் சிதம்பரனார் மிகவும் அழகாகக் கோத்துள்ளார்.

தத்துவ ஞான வித்தகர் : சிதம்பரனார் சிவஞான போதம் என்ற அரிய நூலுக்கு உரை எழுதியுள்ளதை மேலே குறிப்பிட்டோம். அந்த உரைநூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார் :

'திருவள்ளுவரின் திருக்குறள், சிவஞான போதம், கைவல்ய நவநீதம் என்னும் நூல்கள் முறையே நீதி நூல்களிலும் சித்தாந்த நூல்களிலும், வேதாந்த நூல்களிலும் ஒப்புயர்வற்றவை என்பது எனது அபிப்பிராயம்.'

நாட்டின் அவல நிலையை அவர் ஒரு நாளும் மறந்ததில்லை. சமயம் பெரிது என்பதை அவர் எந்நாளும் ஏற்றுக்கொண்டார் ; ஆனால், நாடும் மக்களும் சமயத்தைவிடப் பெரியவர்கள் என்பதை அவர் மறந்ததில்லை. மதவெறியும், குறுகிய சாதி வெறியும் நாட்டைப் பாழ்படுத்தும் என்று அவர் அதே முன்னுரையில் உரைக்கிறார்.

ஆழ்ந்த கல்வியின் பயனாக அவருக்குக் கடவுள் பற்றும், சமயப் பற்றும் மிகுந்தன. அறிவின் பெயரால் கடவுளை மறுக்கும் தன்மை அவருக்கு ஏற்படவில்லை.

சிவஞானபோதச் சிற்றுரையால் யான் கண்ட உண்மை என்ற குறிப்பில் சிதம்பரனாரின் உள்ளக்கிடக்கையை விளக்கமாய்க் காணலாம். அவர் கூறினார் :

'இவ்வுலகத்தின்கண் தோன்றி நிலவுகின்ற சமயங்கள் பல. அவற்றுள் கடவுள் இல்லை என்று சொல்லும் சமயம் ஒன்று. அதனை நாஸ்திக சமயம் என்பர் ஆன்றோர். நாஸ்திக சமயத்தினர் அண்டங்களின் அமைப்பும், அண்டங்கள் ஒன்றையொன்று ஒழுங்காகச் சுற்றிவருதலும், ஒவ்வோர் அண்டத்திலும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஒழுங்காக நிகழ்ந்து வருதலும் இயற்கையின் சக்தியால் என்று சொல்கின்றனர். ஆஸ்திக சமயத்தினர்களோ, அவைகளெல்லாம் ஒழுங்காக நிகழ்ந்து வருதல் கடவுள் சக்தியால் என்று சொல்லுகின்றனர். நாஸ்திகரது இயற்கையைத் தான் ஆஸ்திகர் கடவுள் என்று கூறுகின்றனர் என்று நாஸ்திகரும், ஆஸ்திகரது கடவுளைத்தான் நாஸ்திகர் இயற்கை என்கின்றனர் என்றும் கொள்வரேல் இவ்விரு சமயங்களுள்ளும் வேற்றுமை இல்லை......'

'ஒவ்வொரு சமயத்தினரும் தத்தம் கடவுளையே மற்றைய சமயத்தினர்கள் அவர்களுக்குப் பிரியமான பெயர்களாலும் வடிவுகளாலும் வணங்குகிறார்கள் என்று கொள்ளின் ஆஸ்திக சமயங்களெல்லாம் ஒன்றேயாய் விளங்கும்......'

சிதம்பரனாரின் சர்வமதசமரச நோக்கை இந்த வரிகள் எவ்வளவு அழகாய் விளக்குகின்றன !

நம் நாட்டில் சமய அறிவுக்குக் குறைவில்லை ; ஆனால், சமய நெறிகளைச் சரியாகப் பின்பற்றாததாலும், அரை குறையான சமய ஞானத்தாலும் இந்த நாடு வீழ்ச்சி அடைந்தது. எல்லாம் விதியின் வழி நடக்கும் என்ற கொள்கைக்குத் தவறான பொருள்கொண்டு, மக்கள் செயலற்றுச் சோம்பியதால்தான் பாரத நாடு இழிவுற்றது. அந்த உண்மையைச் சிதம்பரனார் மிகவும் துல்லியமாக விளக்குகிறார்.

'விதி விதி என்று ஆழ்கின்றார் வீணாகத் துன்பில் விதி விதிக்கத் தம்மையன்றி வேறு – பதி ஒருவன் உண்டென்று நம்பி ஒரு சிலர் ; இங்கு அன்னாரின் கண்டறியேன் பேதையரைக் காண் !'— என்கிறார் சிதம்பரனார் 'மெய்யறிவு' என்ற நூலில்.

அறநெறிகளை ஓம்பாத மக்கள் உயர்வுபெற இயலாது என்பது சிதம்பரனாரின் தீர்மானம். 'அகமே புறம்' என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார் :

'அறத்தை அறியா அறிவே மறமாம் ;
அறத்தைப் பிழைத்த அறிவே மிருகம் ;
அறத்தைப் புரியும் அறிவே மனிதன் ;
அறத்தைக் காக்கும் அறிவே கடவுள்—

மிருகத் தன்மை, மனிதத் தன்மை, தெய்வத் தன்மை ஆகிய மூன்றையும் சிதம்பரனர் இந்தச் செய்யுளில் எவ்வளவு தெளிவாக விளக்கிவிட்டார் !

# 16. பாராட்டுகிறார்கள்

மகாகவி பாரதியார் வ. உ. சி. யைத் 'தமிழகத்தார் மன்னன்' என்று பாடுகிறார்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, 'ஒப்பில்லாச் செந்தமிழ்ச் செல்வன்,' என்று போற்றுகிறார்.

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, சிதம்பரனாரிடம், 'வேதாந்த சித்தாந்த மணமே வீசும்,' என்று துதிக்கிறார்.

கவிஞர்களோடு தமிழறிஞர்களும் அவரைக் கொண்டாடு கிறார்கள். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை சொல்கிறார் :

'எந்த நூலை எடுத்தாலும் இவர் முன்பிருந்த நூலாசிரியர்கள் கூறியதனை அலசிப் பார்த்துப் புதிய உரை காணுவதிலேயே முயலு வார். இலக்கணம் முதலிய விலங்குகளையெல்லாம் இவர் அறவே களைந்து எறிந்துவிடுவார். துணிகரமும், உணர்ச்சி வேகமும், எதனையும் தன்னிலையிலிருந்து நோக்கும் நேர்மையும் இவரது முக்கியமான இயல்புகள். எளிமையாக உரைகள் இருக்கவேண்டும் என்ற பெருங்கருத்துக் கொண்டவர்.'

'நாட்டு விடுதலைக்கு ஓயாது உழைத்த சிறந்த வீரர் ; மொழிப்புலமை நிறைந்து உரைநடையிலும் செய்யுள்களிலும் நூல்கள் இயற்றியவர் ; பழந்தமிழ் இலக்கியங்களுக்குப் புது விளக்கம் எழுதியவர் ; தொல்காப்பியத்தின் பழைய உரையைப் போற்றி வெளியிட்டவர்; ஜேம்ஸ் ஆலனின் சில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ; மெய்புணர்வு நூல்களைக் கற்றுத் தெளிந் தவர்'— என்று டாக்டர் மு. வரதராசனார் சிதம்பரனாரைப் போற்று கிறார்.

வ. உ. சி. கப்பல் ஓட்டிய தமிழர் ; தமிழ்க் கடலில் கப்பல் ஓட்டிய தமிழர் !

## நாட்டுக்கு உழைத்த நல்லவர் வரிசை

1. மகாத்மா காந்தி
2. பால கங்காதர திலகர்
3. கோபால கிருஷ்ண கோகலே
4. மதன் மோகன் மாளவியா
5. இராஜாராம் மோகன்ராய்
6. சரோஜினி தேவி
7. ஸி. எப். ஆண்ட்ரூஸ்
8. சுரேந்திரநாத் பானர்ஜி
9. மகாதேவ தேசாய்
10. மோதிலால் நேரு
11. மகாதேவ கோவிந்த ரானடே
12. இராஜேந்திர பிரசாத்
13. ஜவகர்லால் நேரு
14. வல்லபாய் படேல்
15. லால்பகதூர் சாஸ்திரி
16. சித்தரஞ்சன் தாஸ்
17. சுபாஷ் சந்திர போஸ்
18. லாலா லஜபத்ராய்
19. தாதாபாய் நௌரோஜி
20. இந்திரா காந்தி
21. வீரபாண்டிய கட்டபொம்மன்
22. வ. உ. சிதம்பரம் பிள்ளை
23. சுப்பிரமணிய பாரதியார்
24. இராமலிங்க சுவாமிகள்
25. எஸ். இராதாகிருஷ்ணன்
26. இரவீந்திரநாத் தாகூர்
27. ஜான்ஸி ராணி
28. இராமகிருஷ்ண பரமஹம்சர்
29. சுவாமி விவேகானந்தர்
30. ஈசுவர சந்திர வித்யாசாகர்
31. லியோ டால்ஸ்டாய்
32. கஸ்தூர்பா காந்தி
33. அண்ணாதுரை
34. அரவிந்தர்
35. டாக்டர் அம்பேத்கார்
36. சிவாஜி

ஒவ்வொன்றும் விலை ரூ. 1—50 தான்.



XVC:32

## நாட்டுக்கு உழைத்த நல்லவர்

# 22

'நல்லவனாக வாழ்'. நல்ல அறிவுரைதான்! எப்படி நல்லவனாக வாழ்வது? தாய் சொல்லிய வீரக் கதைகளைக் கேட்டுப் பெரிய வீரரானார், சிவாஜி; அரிச்சந்திரன் கதையினால் சத்தியம் தவறாத மகானானார் மகாத்மா காந்தி. இதுபோன்ற நல்லவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தால் நிச்சயம் நல்லவனாக வாழலாம்.

நம் நாட்டிலே தோன்றிய வீரர்கள், தேச பக்தர்கள், அறிஞர்கள், மகான்கள், விஞ்ஞான மேதைகள் எத்தனை எத்தனையோ பேர். அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை, நல்ல தமிழில், எளிய நடையில் 'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' என்னும் தலைப்பிலே வெளியிட்டு, தெய்வத்திற்குச் சமமான குழந்தைகளின் முன் பணிவன்புடன் படைக்கின்றோம். இவ் வரிசை நூல்களை வரிசையாக வாங்கி ஆதரவு தர வேண்டுகிறோம்.